# மித்ரா டைம்ஸ்

தமிழ் & ஆங்கிலம் மாத இதழ்

## MITRA TIMES - Tamil & English Monthly


மலர்: VII இதழ்: 8 | ஜனவரி 2022 | ஆண்டு சந்தா ரூ.240/- | விலை ரூ.20/-

Vol.: VII Issue: 8 | January 2022 | Annual Subscription Rs.240/- | Price Rs. 20




புத்தாண்டின் புதிய பாதை
- ஆசிரியர் கடிதம்

உழைப்பால் உயர்ந்த
திரு.பாலமுருகன் IFS

தமிழரின்
பெருமை மீட்ட
பெண்
வழக்கறிஞர்!

தங்கள்
கிராமத்துக்கு
தாங்களே சாலை
அமைத்துக் கொண்ட
இளைஞர்கள்!

## உலகத்தை அச்சுறுத்தும் ஒமைக்ரான்:
## தமிழக அரசின் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்!

# Happy new year 2022

# RESOLUTION FOR NEWYEAR

A new year can be the beginning of you making changes and living the way you've always wanted. Sticking to a budget can help you save more for the lifestyle that you desire. It can also give you more confidence in your ability to manage your finances. Learn the foods that are best for you to eat to feel your best. Talk with your doctor to know the best things you can eat for your wellness.

There are many benefits to following a consistent sleep sche ule. According to medical source these are some of the top ones:

Reduced stress

Improved mood

Clearer thinking

Books can give you knowledge on many things. Take time to read more of them this year. You can't change what happened in the past. You also can't completely control what happens in the future. What you can do is focus more on the present.

Spending time alone can also be your opportunity to take care of yourself. There are many self-care techniques you can start adopting to your routine for better wellness. Lots of people say learning new things can be a good resolution to set. Perhaps an even better one is learning new things related to your passion. The more new things you learn related to it, the more information that can help you succeed at achieving your passions.

Make your hopes be more likely to come true by writing out what they are. Once you have the goals set out, put together a plan. When it's time to go exercise, go exercise. When it's time to study, start studying. Getting in the habit of doing things on schedule will save you time to do more of the things you enjoy.

Choose to spend your finances on things that really matter to you. The things you buy should be related to what you're passionate about.

We're often persuaded by clever advertisements to buy the latest new phones and other gadgets. But stop to ask yourself if it's what you really want.

There are many things in life to get mad about. If we waste our time getting mad about everything, we won't have much time to just be happy.

Practice being patient in moments where you could get upset. Do your best not to dwell on things that bother you for more than a few minutes. It's important to have balance in your life. It's not good to work all the time. You should balance your work with pleasure in life.



We can invest a lot of time and finances in others, which is good. But it's also important to invest our time and finances into ourselves too.

Take some new classes to develop your knowledge and skills. Look into services that can help your physical and mental well-being. Having multiple sources of income can offer you more financial security. Check out these passive income ideas that might help you increase income.

Paying off your debt can also help you have more freedom to do what you want in life. Learn how to get out of debt and gain more confidence in your finances.

Some of you may be currently working at a job you don't like. You can work to get yourself at a job that you know you'll like this coming year.

There are many bad habits people want to give up when they start fresh. Maybe you've been wanting to break the same bad habit for many years. Make this year the year you finally do it. While phones can be helpful, they can also be really distracting as well. Learn to spend less time on your phone and more time with people in person.




Concept by:
**S.SHRUTHI LAKSHMI**
B.Sc., (psychology)

ஆசிரியர் கடிதம்

# புத்தாண்டின் புதிய பாதை

**அ**ன்புடையீர்! வணக்கம்.

2022ம் ஆண்டின் தொடக்கத்தில் மகிழ்ச்சியோடு சந்திக்கிறோம்.

பழையன கழிதலும் புதியன புகுதலும் உலக இயல்பு.

அந்த வகையில் கடந்த 2020,2021ஆகிய இரண்டு ஆண்டின் நாட்கள் நமக்கு வாழ்க்கையில் கற்றுத் தந்த பாடங்களை புதிய ஆண்டின் புதிய பாதையில் அடியெடுத்து வைக்கும் முன்பு சற்று திரும்பிப் பார்ப்போம்!

நமக்கு நடக்காது என்று நினைத்திருந்த எல்லாவற்றையும் நடத்திக் காட்டி விட்டது. மதிக்காமல் இருந்த அத்தனையையும் மதிக்க கற்று கொடுத்து விட்டது. உயிர்களை எடுத்து கொண்டது. உணர்வுகளை தட்டி எழுப்பியது. வருமானத்தை முடக்கியது. வாழ முடியும் என்று காட்டிக் கொடுத்தது.

நேரமே இல்லாமல் ஓடிக் கொண்டிருந்தவர்களை நேரமோ நேரம் என்று அமரச் செய்தது. இந்த பிரபஞ்சத்தில் நாம் ஒன்றுமே இல்லை என்று முகத்தில் அறைந்து சொல்லியது.

முகமூடிகளை அளித்து அகமூடிகளை அழித்தது. கஷ்டங்களை கடக்கும் தைரியம் தந்தது. வாழ்நாளில் மறக்க முடியாத அனுபவம் தந்தது.

வரும்2022ம் ஆண்டை Who Will Cry When You Die? ”ராபின் ஷர்மா எழுதிய புத்தகத்தில் சொன்ன கருத்துக்களோடு பயணிப்போம் வாருங்கள்.

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு நபரும் உங்களுக்கு ஏதோ ஒன்றை சொல்லி தருகின்றார். எனவே நீங்கள் சந்திக்கும் எல்லோரிடமும் கருணையுடன் இருங்கள்.

உங்களுக்கு எந்த விஷயத்தில் திறமை உள்ளதோ அதிலேயே கவனத்தையும், நேரத்தையும் அதிகம் செலுத்துங்கள். மற்ற விஷயங்களுக்காக அதிக நேரம் செலவழிக்காதீர்கள்.

அடிக்கடி கவலைப்படாதீர்கள். தேவை எனில் கவலை படுவதற்கென ஒவ்வொரு நாளும் மாலை நேரம் முப்பது நிமிடம் ஒதுக்குங்கள். அந்த நேரம் அனைத்து கவலைகள் குறித்து சிந்தியுங்கள்.

அதிகாலையில் எழப்பழகுங்கள். வாழ்வில் வென்ற பலரும் அதிகாலையில் எழுபவர்களே.

தினமும் நிறைய சிரிக்க பழகுங்கள். அது நல்ல ஆரோக்கியத் தையும், நண்பர்களையும் பெற்று தரும்.

நிறைய நல்ல புத்தகங்களை படியுங்கள். எங்கு சென்றாலும், பிரயாணத்தின் போதும் ஒரு புத்தகத்துடன் செல்லுங்கள். காத்திருக்கும் நேரத்தில் வாசியுங்கள்.



எண்ணம்

உங்கள் பிரச்சனைகளை ஒரு தாளில் பட்டியலிடுங்கள். இவ்வாறு பட்டியலிடும் போதே உங்கள் மன பாரம் கணிசமாக குறையும். அதற்கான தீர்வும் இதன் மூலம் கிடைக்கவும் வாய்ப்பு உண்டு.

உங்கள் குழந்தைகளை, உங்களுக்கு கிடைத்த மிக சிறந்த பரிசாக (Gift) நினையுங்கள். அவர்களுக்கு நீங்கள் தரக் கூடிய சிறந்த பரிசு, அவர்களுடன் நீங்கள் செலவிடும் நேரமே.

தனக்கு வேண்டியதை கேட்பவன் சில நிமிடங்கள் முட்டாளாய் தெரிவான். தனக்கு வேண்டியதை கேட்காதவன் வாழ் நாள் முழுவதும் முட்டாளாய் இருக்க நேரிடும்.

எந்த ஒரு புது பழக்கமும் உங்களுக்குள் முழுதும் உள் வாங்கி, அது உங்கள் வாடிக்கையாக மாற 21 நாட்களாவது ஆகும். ஆகவே தேவையான விஷயங்களை திரும்ப திரும்ப செய்யுங்கள்.

தினமும் நல்ல இசையை கேளுங்கள். துள்ளலான நம்பிக்கை தரும் இசை, புன்னகையையும் உற்சாகத்தையும் தரும்.

புது மனிதர்களிடமும் தயங்காது பேசுங்கள். அவர்களிடமிருந்து கூட உங்களைப்போல பல சிந்தனைகளும், நல்ல நட்பும் கிடைக்கலாம்.

பணம் உள்ளவர்கள் பணக்காரர்கள் அல்ல. மூன்று சிறந்த நண்பர்களை கொண்டவனே பணக்காரன்.

எதிலும் தனித்துவமாக இருங்கள். பிறர் செய்வதையே வித்தியாசமாக, நேர்த்தியாக செய்யுங்கள்.

நீங்கள் படிக்க துவங்கும் எல்லா புத்தகமும் முழுவதுமாய் படித்து முடிக்க வேண்டியவை அல்ல. முதல் அரை மணியில் உங்களை கவரா விட்டால் அதனை மேலும் படித்து நேரத்தை வீணாக்காதீர்கள்.

உங்கள் தொலை/கை பேசி உங்கள் வசதிக்காகத்தான். அது அடிக்கும் ஒவ்வொரு முறையும் நீங்கள் எடுத்து பேச வேண்டும் என்பதில்லை. முக்கியமான வேளைகளில் நடுவே இருக்கும் போது தொலை பேசி மணி அடித்தாலும் எடுத்து பேசாதீர்கள்.

உங்கள் குடும்பத்தின் முக்கிய நிகழ்வுகளை அவசியம் புகைப்படம் எடுங்கள். பிற்காலத்தில் அந்த இனிய நாட்களுக்கு நீங்கள் சென்று வர அவை உதவும்.

அலுவலகம் முடிந்து கிளம்பும் போது சில நிமிடங்கள் வீட்டிற்கு சென்றதும் மனைவி/ குழந்தைகளுக்கு என்ன செய்ய வேண்டுமென யோசியுங்கள்.

நீங்கள் எவ்வளவு வெற்றி அடைந்தாலும், எளிமையான (humble) மனிதராயிருங்கள். வெற்றிகரமான பல மனிதர்கள் எளிமையான வர்களே!

ஆணவம் ஆயுளைக் குறைக்கும்.

உங்களுக்கு இந்த ஆண்டு இனிமையான ஆண்டாக அமைந்திட மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகள்!

**– எம்.எஸ்.மூர்த்தி**

# மித்ரா டைம்ஸ்

மித்ரா - 07 ஜனவரி 2022 டைம்ஸ்- 8

அச்சிட்டு வெளியிடுபவர் & ஆசிரியர்
**எம்.எஸ்.மூர்த்தி**

நிர்வாக ஆசிரியர்
திருமதி. **சுஜாதா மூர்த்தி**

செய்தி ஆசிரியர்
மணவூர் **கி.விடாரண்யம்** பி.ஏ.,பி.ஜி.எல்.,
9789837069, 9962177865

**சிறப்பு ஆலோசகர்**
**கலைமாமணி டாக்டர் நடிகர் பூவிலங்கு மோகன்**

**நிர்வாக ஆசிரியர்**
**ஆர்.குணசேகரன்**

**செய்தியாளர்கள்**
**ஆர்.அரிபாபு, ஆர்.முரளி, பி.வினோத்**

செய்தி இணை ஆசிரியர்கள்
கவிஞர் **சுகந்தீனா**
**துடுப்பதி ரகுநாதன்**

இணையதள செய்தியாளர்
**எஸ்.சுருதிலட்சுமி** பி.எஸ்சி.,

சட்ட ஆலோசகர்
**வி.என்.பிரசாத்** எம்.ஏ.,பி.எல்.,

வடிவமைப்பு
**vidapublications@gmail.com**

விளம்பரம், சந்தா தொடர்புக்கு
**சி.இளவரசி**
044-23743007 / 8

**அலுவலகம்:**
**001, இன்ஞ்சக்கல் பிளாக், சித்ரா அவென்யூ,**
**9, சூளைமேடு ஹைரோடு, சென்னை - 94.**
**தொடர்பு: 044-2374 4661, 23743 007/8**

**82485 85067**
mitratimes2015@gmail.com
www.mitratimes.com


# உள்ளே...



7 உலகத்தை அச்சுறுத்தும் ஒமைக்ரான்: தமிழக அரசின் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்!


11 தங்கள் கிராமத்துக்கு தாங்களே சாலை அமைத்துக் கொண்ட இளைஞர்கள்!


17 உழைப்பால் உயர்ந்த திரு.பாலமுருகன் IFS


33 வாயுத்தொல்லை நீக்கும் வழிமுறைகள்!


39 வாங்க உற்சாகமாய் கொண்டாடுவோம்!


45 தமிழக அரசின் "இல்லம் தேடி கல்வி" திட்ட அதிகாரி திரு.இளம் பகவத் ஐ.ஏ.எஸ்

உன்னால் முடியும் பெண்ணே!

# தமிழரின் பெருமை மீட்ட பெண் வழக்கறிஞர்!



**கீ**ழடி நாகரிகம் பற்றி இன்று சர்வதேச சமுதாயமே பேச ஆரம்பித்து இருக்கிறது. ஆனால், இந்திய அரசின் தொல்லியல் துறையால் முதலில் செய்யப்பட்ட ஆய்வுகளின் அறிக்கை வெளியிடப்படாமலே இருந்தது.

கீழடி ஆய்வு அறிக்கையை வெளியிடவும், அங்கு தொடர்ந்து அகழாய்வுகள் நடக்கவும், காரணமாக இருந்தவர் ஒரு பெண் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவர் பெயர் கனிமொழி மதி. வழக்கறிஞர்.

ஒரு பெண் கல்வியறிவு பெற்றால் அந்தக் குடும்பத்திற்கே கல்வியறிவு கிடைக்கும் என்று சொன்னார் தந்தை பெரியார். ஆனால் கனிமொழி மதி பெற்ற கல்வியறிவால் தமிழ்ச்சமூகமே வெளிச்சம் பெற்றுள்ளது.

இந்தியத் தொல்லியல் துறை நடத்தி வந்த கீழடி அகழ்வாய்வை, தமிழக அரசே எடுத்து நடத்தவும், அங்கு கிடைத்த பொருட்களை அங்கேயே வைத்து அருங்காட்சியகம் அமைத்து பாதுகாக்க இடம் ஒதுக்கப்படவும் வழக்கறிஞர் கனிமொழி மதி, சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் தொடுத்தார் பொதுநல வழக்கு.

திண்டுக்கல் மாவட்டம் தேவத்தூர் கிராமத்தைச் சேர்ந்தவர் கனிமொழி மதி. எட்டாம் வகுப்பு வரை அதே கிராமத்தில் படித்தவர் பின்னர் பன்னிரண்டாம் வகுப்பு வரை திண்டுக்கல்லிலேயே படித்தார். அப்பா பெரியார் கொள்கைகளில் ஈடுபாடு உடையவர் என்பதால், அதிகப் புத்தகங்கள் வீட்டில் இருந்தன. வீட்டில் நிறைந்து கிடக்கும் அந்தப் புத்தங்களைப் படித்துத் தெளிந்த அறிவை பெருக்கிக் கொள்ளும் வாய்ப்பு அப்பாவால் இவருக்குக் கிடைத்தது. கனிமொழி இளநிலை பாடமாக திருச்சி ஹோலி கிராஸ் கல்லூரியில் வரலாற்றுப் பிரிவை எடுத்துப் படித்தவர், அதனைத் தொடர்ந்து சென்னை அம்பேத்கர் அரசு சட்டக்கல்லூரியில் சட்டம் படித்து முடித்தார். 8 ஆண்டுகள் மூத்த வழக்கறிஞர்களுடன் பணியாற்றி விட்டு 2009 ஆம் ஆண்டு முதல் தனியாக வழக்குகளை எடுத்து வாதாடி வருகிறார்.

கீழடியில் இரண்டாவது கட்ட ஆய்வுகள் நடைபெற்று கொண்டிருந்தபோதுதான், அது பற்றிய செய்திகள் வெளிவந்ததைப் பார்த்து வியப்படைந்துள்ளார் வரலாற்று மாணவியான கனிமொழி மதி. மதுரைக்கு வழக்குக்காக அடிக்கடி சென்று வந்த போதுதான் பக்கத்திலுள்ள கீழடியில் தொல்பொருள் ஆராய்ச்சி என்றவுடன் இவருக்கு ஆர்வம் ஏற்பட்டுள்ளது.கீழடியில் கட்டடச் சுவர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று கேள்விப்பட்டபோது இவரது ஆர்வம் இன்னும் அதிகமானது.

குவியல் குவியலாகக் கிடைத்த பானை ஓடுகள், கலைநயம் மிக்க பொருட்கள், கிணறு அமைப்பு, குழாய் மூலம் தண்ணீர் எடுத்து வருவது, கொண்டு செல்வது போன்றவை எல்லாம் அங்கு கண்டுபிடிக்கப்பட்டுள்ளதை நேரில் சென்று பார்த்துள்ளார்.



அடுத்தது நாகரிக வளர்ச்சியைக் காட்டும் என்ன புதையல் கீழடியில் இருந்து கிடைக்கப்போகிறது என்று ஆவலோடு கனிமொழி மதி காத்திருந்த சமயத்தில் தான், அந்த அதிர்ச்சியான தகவல் கிடைத்தது. கீழடி அகழாய்வு அடுத்து நடத்தப்படாது என்று 2016 செப்டம்பரில் அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றத்தில் தொடுப்பதை விட உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தொடுத்தால் வழக்கின் சாராம்சம் முக்கியத்துவம் பெறும் என்று மதுரையில் வழக்கைத் தொடுத்தார். மதுரையில் வழக்குத் தொடர்ந்ததால் போக்குவரத்தில் சிக்கல் இருந்தாலும் வேறு சொந்த வழக்குகளுக்கு ஆஜராகாவிட்டாலும் இந்தப் பொதுநல வழக்கில் ஒரு நாள் கூட ஆஜராகாமல் இருந்து விடக் கூடாது என்பதில் உறுதியாக இருந்துள்ளார் கனிமொழி.

வழக்கு தொடர்பான அத்தனை தகவல்களைத் திரட்டி நீதிமன்றத்தில் மேற்கோள் காட்டி வாதாடி இருக்கிறார். கீழடி அகழாய்வுக்காக பொதுநல வழக்கு தொடர்ந்ததை நீதிபதிகளே முதலில் பாராட்டினர். பின்னர் இந்த வழக்கில் சரியான தீர்ப்பை அளிக்க வேண்டும் என்பதால் அவர்கள் நேரடியாக கீழடிக்குச் சென்று ஆய்வு நடத்தி அதன் பின்னர் இந்தியத் தொல்லியல் துறைக்கு பல்வேறு உத்தரவுகளைப் பிறப்பித்தனர். கீழடியில் 4ஆம் கட்ட அகழாய்வுப் பணியில் தமிழக அரசும் இணைந்து செயல்பட மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். கனிமொழி மதியின் முயற்சிக்கு வெற்றியாக கீழடியில் 4ஆம் கட்ட அகழாய்வுப் பணி தொடங்கியது.

கனிமொழி மதியின் முயற்சி இன்று வெற்றி கண்டுள்ளது. கீடியில் தொடர்ந்து நடத்தப்பட்ட அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட பொருட்கள் தற்காலிக அருங்காட்சியகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. அதனைத் தமிழர்களாகிய நாம் மட்டுமின்றி உலகமெங்கும் இருக்கும் தமிழர்களும் மார்தட்டிப் பெருமையோடு சொல்லி வருகிறோம், நாங்கள் தான் மனித நாகரிகத்தின் ஊற்றுக்கண் என்று!

அந்த பெருமையை மீட்டெடுக்கும் முயற்சியில் வெற்றி பெற்ற பெண் வழக்கறிஞர் கனிமொழி மதிக்கு மித்ரா டைம்ஸ் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறது.

**- சுஜாதாமூர்த்தி**

# உலகத்தை அச்சுறுத்தும் ஓமைக்ரான்: தமிழக அரசின் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்!

உலகையே சுகாதார சீர்கேட்டிற்குள்ளாக்கிய கொரோனா கடந்த 2019ம் ஆண்டு இறுதியில் சீனாவில் முதன் முதலாக கண்டறியப்பட்டது. பின்னர், படிப்படியாக உலகம் முழுவதும் பரவி, பெரும் பாதிப்பை உண்டாக்கியது. இந்த நோய் தொற்றுக்கு பல கோடி பேர் பாதிக்கப்பட்டனர். மேலும், லட்சக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

கடந்த ஓராண்டாக கொரோனா தொற்று பாதிப்பு கட்டுக்குள் வந்தாலும், மரபணு மாறி புதிய வகை தொற்றுகள் அடுத்தடுத்து உருவாகி வருகின்றன. புதிய வைரஸ்களுக்கு கிரேக்க எழுத்துகளின் அடிப்படையில் உலக சுகாதார அமைப்பு பெயர் சூட்டி வருகிறது. அந்த வகையில், கடந்த மாதம் தென்னாப்ரிக்காவில் உருமாறிய கொரோனா தொற்று கண்டறியப்பட்டது. இதற்கு ஒமிக்ரான் என பெயரிடப்பட்டது. இந்த தொற்று டெல்டா வைரஸை விட 3 மடங்கு அதிகமாக பரவும் தன்மை கொண்டுள்ளதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டது. அதுபோன்ற உலக நாடுகளில் ஒமிக்ரான் அச்சுறுத்தல் பாதிப்பு அதிகரித்து வருகிறது.

அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்சில் கொரோனா கோரத்தாண்டவம். அமெரிக்காவில் ஒருநாள் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 1,85,122. இங்கிலாந்தில் 24 மணிநேரத்தில் 137,583 பேருக்கு கொரோனா தொற்று உறுதி. இத்தாலியில் 61,046; பிரான்சில் 58,432 பேருக்கு ஒரே நாளில் கொரோனா பாதிப்பு. ரஷ்யாவில் ஒரே நாளில் கொரோனாவால் 811 பேர் உயிரிழப்பு.

வியட்நாமில் கொரோனாவுக்கு நேற்று ஒரே நாளில் 221 பேர் மரணம். கொரோனா சுனாமி அலை ஏற்படும் உலக சுகாதார நிறுவனம் கவலை.

டெல்டா, ஓமிக்ரான் ஆகிய இரட்டை அச்சுறுத்தல்களால் கிருமி தொற்று, உயிரிழப்பு ஆகியவற்றின் உலகளாவிய விகிதம் அபாயகரமான அளவுக்கு அதிகரித்துவிட்டதாக உலக சுகாதார நிறுவனம் கவலை தெரிவித்துள்ளது.

ஜெனீவாவை செய்தியாளர்களைச் சந்தித்த உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதானோம், டெல்டா மற்றும் ஓமிக்ரான் உருமாறிய கொரோனா வகைகள் ஆகிய இரட்டை அச்சுறுத்தல்களை உலக நாடுகள் எதிர்கொண்டுள்ளன.

தொற்றின் எண்ணிக்கையும், மருத்துவமனையில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கையும், உயிரிழப்புகளும் நாளுக்கு நாள் உயர்ந்து வருகிறது.

இந்த ஒரு வாரத்தில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 11 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

குறிப்பாக அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடுகளில் வைரஸ் பாதிப்பு புதிய உச்சத்தை அடைந்துள்ளது.

இதே வேகத்தில் தொற்று பரவினால், டெல்டா மற்றும் ஓமிக்ரான் திரிபுகளால் உலகில் கொரோனா சுனாமி அலை ஏற்படும். 2022ன் நடுப்பகுதிக்குள் அனைத்து நாடுகளிலும் குறைந்தது 70 சதவிகித பேருக்கு வேக்சின் செலுத்த வேண்டும் என்பதை நாம் புத்தாண்டு உறுதிமொழியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உலகின் பணக்கார நாடுகள் மாஸ்க், சிகிச்சை கருவிகள், நோயறிதல் கருவிகள் மற்றும் வேக்சின் போன்றவற்றைப் பதுக்கி வைத்துக் கொள்கின்றன. இது அடுத்தடுத்த புதிய வகை கொரோனா உருவாகக் காரணமாகி பேரபாயத்திற்கு வழிவகை செய்கிறது.

வேக்சின் போட்டுக் கொள்ள மக்கள் தயக்கம் காட்டினர். இதன் காரணமாகவே தற்போது கொரோனா பாதிப்பு மின்னல் வேகத்தில் அதிகரித்து வருகிறது.

2020ம் ஆண்டு கொரோனா பாதிப்பால் சுமார் 18 லட்சம் பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்த ஆண்டு 35 லட்சம்



கொரோனா உயிரிழப்புகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

ஆனால், உண்மையான எண்ணிக்கை இதைவிடப் பல மடங்கு அதிகமாக இருக்கும் என்றார். இந்நிலையில் இந்தியாவில் அனைத்து மாநிலங்களும் சிறப்பு கவனத்துடன் பணியாற்ற வழிகாட்டும் நெறிமுறைகளை மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது.

தமிழக அரசின் சுகாதாரத்துறை செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களுக்கு மத்திய அரசின் சுகாதாரத்துறை செயலாளர் ராஜேஷ் பூஷன் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். அதில், கொரோனா தொற்று பரவல் மற்றும் ஒமைக்ரான் பரவல் காரணமாக அனைத்து மாநிலங்களிலும் மாவட்ட அளவில் கட்டுப்பாடுகளை அமல்படுத்த ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் சர்வதேச பயணிகளை மாநில அரசுகள் தீவிரமாக கண்காணிக்க வேண்டும்.

புதிதாக உருவாகும் ஹாட்ஸ்பாட்கள் மற்றும் தொற்று உறுதி செய்யப்பட்ட நபருடன் தொடர்பில் இருந்தவர்களை தொடர்ந்து 14 நாட்கள் கவனிக்க வேண்டும். அதிகப்படியான பரிசோதனை மூலம் தொடக்க நிலையிலேயே வைரஸ் பாதிப்பை







கண்டறிய வேண்டும். கிராமப்புறங்கள் மற்றும் குழந்தைகளுக்காக சுகாதார உள்கட்டமைப்பு வசதிகளை மறு ஆய்வு செய்து முன்னேற்பாடுகளை செய்ய வேண்டும்.





எல்லாவற்றையும் விட முக்கியமாக கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.தற்போது தமிழ்நாட்டில் பரவி வரும் உருமாறிய கொரோனா ஒமைக்ரான் வைரஸ் நோயைக் கருத்தில் கொண்டும் தடுப்பூசி செலுத்தும் பணியினை விரைவுபடுத்தவும் தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றதுதடுப்பூசி செலுத்திக் கொள்ளாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களை ஒமைக்ரான் வைரஸ் அதிகம் தாக்க வாய்ப்புள்ளதால் இதுவரை செலுத்திக் கொள்ளாதவர்கள் தடுப்பூசி செலுத்திக் கொள்ளுமாறும், முதல் தவணை தடுப்பூசி செலுத்தியிருந்து, இரண்டாம் தவணை தடுப்பூசி இரண்டாம் தவணை தடுப்பூசியையும் செலுத்திக் கொள்ளாதவர்கள் உடனடியாக தடுப்பூசி செலுத்திக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறதுகடைகளின் நுழைவு வாயிலில், வாடிக்கையாளர் பயன்படுத்தும் வகையில் கை சுத்திகரிப்பான்கள் (Hand Sanitizer with Dispenser) கட்டாயமாக வைக்கப்படுவதோடு, உடல் வெப்ப நிலை பரிசோதனை கருவி கொண்டு பரிசோதனை செய்ய வேண்டும் (Thermal Screening).



கடைகளில் பணிபுரிபவர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கட்டாயம் முகக்கவசம் அணிவதை சம்மந்தப்பட்ட நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வணிக நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் மற்றும் அதன் உரிமையாளர்கள் அனைவருக்கும் கட்டாயம் தடுப்பூசி செலுத்தப்பட்டிருக்கவேண்டும்.

அனைத்து நிறுவனங்களும் குளிர் சாதன வசதியை தவிர்த்து வாடிக்கையாளர்களை அனுமதிக்கும் போது சமூக இடைவெளியை கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்:**

தமிழ்நாட்டில், கொரோனா நோய்த் தொற்று பரவல் கட்டுக்குள் இருந்தாலும் தற்போது உருமாறிய கொரோனா ஒமைக்ரான் வைரஸ் நோய் பரவி வருவதால், பொது இடங்களில் கொரோனா தடுப்பு நடைமுறைகள் கட்டாயம் பின்பற்றப்படுவதை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர். மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் உறுதிப்படுத்த வேண்டும். தொழிற்சாலைகள், வணிக நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றில் கொரோனா நோய்த் தடுப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுவதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் பொதுமக்கள் அனைவரும் கூட்டம் கூடுவதை தவிர்க்குமாறும், பொது இடங்களில் கட்டாயம் முகக் கவசம் அணிந்து சமூக இடைவெளியினை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும்.

மேலும், மாவட்ட நிருவாகம், பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவத் துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் நடத்தப்படும் தடுப்பூசி முகாம்களுக்கு சென்று பொதுமக்கள் குறிப்பாக 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் தடுப்பூசியினை கொள்ளுமாறும். மக்கள் நலன் கருதி கட்டாயம் அரசு செலுத்திக் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் எனத்தெரிவித்துள்ளார்.

– கே.கலியபெருமாள் (K.P)

# கிராமத்தை வளமாக்கிய மாணவி ஜெயலட்சுமி!

## -நாசா விண்வெளிக் கனவு மெய்ப்படும் என நம்பிக்கை

பள்ளிக்கூடத்தில் கேரம் விளையாடிக் கொண்டிருந்தார் அந்தச் சிறுமி. பெயர் ஜெயலட்சுமி.அப்போது தேங்கியிருந்த தண்ணீரில் ஒரு காகிதம் கிடப்பதை எடுத்துப் பார்த்து அதைப் படிக்க ஆரம்பித்தார். புத்தகம் வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் உள்ள அந்தச் சிறுமி அந்தக் காகிதத்தை எடுத்துப் படித்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை.

மதுரையிலே தான்யா என்கிற மாணவி பரீட்சை எழுதி, நாசா விண்வெளி மையத்துக்குப் போய் வந்த செய்தி அதில் இடம்பெற்றிருந்தது. அந்தச் செய்தியின் இறுதியில் அந்தப் பரிட்சை எழுதுகிற ஆன்லைன் லிங்கும் கொடுக்கப்பட்டிருந்தது.

தானும் அதுபோல நாசா செல்ல வேண்டும் என்று விரும்பிய ஜெயலட்சுமியின் குடும்பம் எப்படிப்பட்டது தெரியுமா? மனநலம் பாதிக்கப்பட்ட தாய், தம்பி கோவிந்தராஜ் இவர்களைத் தவிக்கவிட்டு நான்காண்டுகளுக்கு முன்பே எங்கோ சென்றுவிட்ட அப்பா.. ஆதரவு ஏதும் இன்றி முந்திரிக்கொட்டை உடைத்து அதில் கிடைக்கும் பணத்தை வைத்துக்கொண்டு படித்தபடியே ஏழ்மையில் வாழ்ந்து வருகிறார் ஜெயலட்சுமி.

அவருக்கு இருக்கும் ஒரே ஆதரவு அவரது சித்தப்பா கண்ணன். வீட்டுக்கு வந்ததும் தன் சித்தப்பா போனை வாங்கி அந்த வெப்சைட்டை தேடிப் பிடித்தார். பிறகென்ன ஒருவழியாக அதற்கான தேர்வை எழுதி முடித்தார்.

புதுக்கோட்டை ஆதனக்கோட்டையைச் சேர்ந்த மாணவி ஜெயலெட்சுமி புதுக்கோட்டை ராணியார் அரசு மகளிர் பள்ளியில் 12ஆம் வகுப்பு தமிழ் வழியில் படித்து வருபவர் தனியார் நிறுவனம் நடத்திய விண் அறிவியல் போட்டியில் ஆங்கிலத்தில் தேர்வு எழுதி வெற்றிபெற்று, அமெரிக்காவின் 'நாசா'வுக்குச் செல்ல இப்படியாகத் தேர்வு செய்யப்பட்டார்...





ஜெயலட்சுமியின் பள்ளியில் அறிவியல் ஆசிரியராக உள்ள சுமதி, துர்கா பரமேஸ்வரி இருவரும் செயற்கைக்கோள்கள் மற்றும் விண்வெளி சம்பந்தமானசெய்திகளைக் கத்தரித்து எடுத்து வந்து பள்ளியில் படிக்கச் சொல்லி அதைப் பழக்கமாகவே அவருடைய மாணவர்களிடையே வளர்த்துள்ளனர். அதுவும் ஜெயலட்சுமியின் விண்வெளி குறித்த ஆர்வத்துக்கு ஒரு முக்கியக் காரணமாக இருந்துள்ளது.

பொதுவாக இணையவழித் தேர்வுகளை கணினியில் எழுதுவதுதான் சுலபமாக இருக்கும். ஆனால் ஜெயலட்சுமியோ செல்போனிலேயே எழுதி இருக்கிறார்.

ஊராட்சித் தலைவரான தன் சித்தப்பாவிற்கு ஊராட்சி நிர்வாகம் சம்பந்தமான செய்திகளை வாசித்துச் சொல்வதையும், அது சம்பந்தமான வேலைகளுக்காகவும் அவரது செல்போனை பயன்படுத்தி உதவி செய்ய ஆரம்பித்த ஜெயலட்சுமிக்கு அப்படிச் செய்யும்போது செல்போன் பயன்படுத்துவதிலும், இணையத்தைப் பயன்படுத்துவதிலும் அனுபவம் அதிகரிக்க அதன்மூலம் செல்போன் வழியாகவே பரிட்சை எழுதி தேர்வாகி இருக்கிறார் ஜெயலட்சுமி.

ஜெயலட்சுமி நாசா செல்லத் தேர்வாகியிருந்தாலும், அவர் சென்று திரும்பும் பயணச்செலவை அவரே ஏற்க வேண்டும் என 'கோ ஃபார் குரு' என்ற நாசாவுக்கு அவரை அனுப்பும் அந்தத் தனியார் நிறுவனம் தெரிவித்தது.2 லட்சத்துக்கும் அதிகமான பணத்தை ஏற்பாடு செய்ய வழிதெரியாமல் பள்ளியிலேயே மனமுடைந்து அழுதுள்ளார் ஜெயலட்சுமி.

தங்களின் தோழிக்காக 'பிரபாகரன் புரட்சி விதைகள்' என்ற பெயரில் பட்டதாரி இளைஞர்களால் நடத்தப்படும் நற்பணிக்குழுவை அணுகியுள்ளனர் ஜெயலட்சுமியின் பள்ளித்தோழிகள். அந்தக் குழுவின் பிரான்ஸிஸ் எடிசன் ஜெயலட்சுமியைப் பற்றி முகநூலில் எழுதவே, ஜெயலட்சுமியின் வங்கிக் கணக்குக்கே நேரடியாக பொதுமக்களின்

நன்கொடைகளால் தேவையான பணம் வந்து சேர்ந்துள்ளது. ஏன் கொஞ்ச காலத்தில் தேவைக்கும் அதிகமாகவே உதவிகள் கிடைத்து விட்டது.அந்த நேரத்தில்தான், 'கிராமாலயா' என்ற ஒரு தொண்டு நிறுவனம் ஜெயலெட்சுமிக்கு உதவ முன்வந்தது. "உங்கள் தேவையைச் சொல்லுங்கள்..." என்று ஜெயலெட்சுமியிடம் தொண்டு நிறுவனத்தினர் கேட்டனர். அதற்கு ஜெயலெட்சுமி, "அமெரிக்கா செல்லத் தேவையான பண உதவி கிடைத்துவிட்டது" என்று கூறியுள்ளார்.

"சரி, வேறு என்ன உதவி வேண்டும்?" என்று தொண்டு நிறுவனத்தினர் கேட்ட கேள்விக்கு ஜெயலெட்சுமி வைத்த கோரிக்கை, இன்று அவர் கிராமத்தையே முன்மாதிரி ஆக்கியுள்ளது. அம்மக்களின், குறிப்பாக அந்த ஊர்ப் பெண்களின் பல ஆண்டு அவஸ்தைகளுக்கு முற்றுப் புள்ளி வைத்துள்ளது.

அப்படி என்ன கேட்டார் ஜெயலெட்சுமி?

"எனக்கு என்று எந்தத் தேவையும் இல்லை. ஆனால், எங்கள் கிராமத்திற்கு நிறைய தேவைகள் உள்ளன. முக்கியமாக, கழிப்பறைகள் இல்லாமல் பெண் பிள்ளைகள் ரொம்பவே சிரமப்படுகிறோம். உங்களால் அதற்கு உதவ முடியுமா?" ஜெயலெட்சுமியின் இந்த வேண்டுகோளிலிருந்து ஆரம்பமானது, ஒரு நல் முயற்சி. ஜெயலெட்சுமியின் கிராமமான ஆதனக்கோட்டையை முழுவதும் ஆய்வு மேற்கொண்ட `கிராமாலயா' தொண்டு நிறுவனம், அங்கு கழிப்பறை வசதி இல்லாத 125 வீடுகளுக்கு 125 குளியலறையுடன் கூடிய கழிப்பறைகள் கட்டிக்கொடுத்துள்ளனர்.

"நான் `நாசா' போவதற்கான உதவிகள் செய்றதுக்காகத்தான், `கிராமாலயா' தொண்டு நிறுவன நிறுவனர் தாமோதரன் சார் என்கிட்ட பேசினார். அந்த நேரத்தில எனக்குப் பல நல்ல உள்ளங்கள்கிட்டயிருந்தும் நிறைய உதவிகள் கிடைச்சிருந்தது. `வேற என்ன உனக்குத் தேவை இருக்கும்மா?'னு கேட்டாரு. அவர் அப்படிக் கேட்ட நிமிஷம், எங்க ஊருல நானும், என் வயசுப் பிள்ளைகளும், ஊருல இருக்க எல்லா பெண்களும் கழிப்பறை இல்லாததால திறந்தவெளியைப் பயன்படுத்திவந்த அவஸ்தைகள் எல்லாம்தான் சட்டுனு நினைவுக்கு வந்துச்சு.

"அதை அவர்கிட்ட சொல்லி, "எங்க ஊர்ல, கழிப்பறை வசதிஇல்லாதவங்களுக்கு அதைக் கட்டிக் கொடுக்க முடியுமா சார்?"னு கேட்டேன். உடனே சார் மலர்ந்துபோய்,"ஏற்படுத்திக்கொடுத்திட்டா போச்சு..."னு





சொன்னார்.

"நம்பவே முடியல... அடுத்த சில நாள்கள்லேயே `கிராமாலயா'விலிருந்து எங்க ஊருக்கு ஆள்கள் வந்தாங்க. சர்வே எடுத்தாங்க. சிமெண்ட், செங்கல்னு வந்து இறங்கிச்சு. சுவர் எழும்புச்சு. கொஞ்ச நாள்ல கழிப்பறை தயாராகிடுச்சு. எனக்கு மட்டுமல்ல... எங்க கிராமத்துக்கே ஆச்சர்யம் விலகல. இப்போ, 'கிராமாலயா' குழுவில் நானும் ஒரு உறுப்பினராக இருக்கேன்"என்கிறார் மாணவி ஜெயலட்சுமி.

நாசாவிற்கு போகும் ஜெயலட்சுமி பற்றிய செய்தியைக் கேள்விப்பட்டு இஸ்ரோவின் முன்னாள் இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை தொலைப்பேசியில் அழைத்துப் பேசியுள்ளார். இந்திய விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோவுக்கு அழைத்துச் செல்வதாக மயில்சாமி அண்ணாதுரை அப்போது அவரிடம் கூறியிருக்கிறார்.

2021 மே மாதம் நாசா விண்வெளி மையத்தைப் பார்வையிடச் செல்லும் ஜெயலட்சுமி அங்கு நடக்கும் ஒரு தேர்வை எழுத இருந்தார். அந்த தேர்வில் வெற்றி பெற்றால் அவருக்கு 10,000 அமெரிக்க டாலர்கள் (7 லட்ச ரூபாய்) பரிசாகக் கிடைக்கும். அந்த தேர்வுக்காகத் தயாராகி வந்த நிலையில் நாசாவில் இருந்து ஜெயலட்சுமிக்கு ஒரு கடிதம் வந்தது.

'மே மாதம் 'நாசா'வுக்குப் போக வேண்டிய திட்டம், கொரோனாவால கேன்சல் ஆகிடுச்சு. நாசா செல்லும் பயணத்தை ரத்து செய்து, பணத்தைத் திருப்பி வாங்கிக்கிறீங்களா, இல்ல அடுத்த ஆண்டு போறீங்களா?'இதுதான் அந்தக் கடிதத்தில் இருந்த தகவல்.

"பணத்தைவிட கனவுதானே பெருசு... என்னோட நாசா கனவுதானே இத்தனை பேரை எனக்கு உதவவெச்சு, கிராமத்துக்குக் கழிப்பறைகள்வரை கட்டிக்கொடுத்திருக்கு... அதனால, அடுத்த ஆண்டு அதாவது இந்த 2022ஆம் ஆண்டு போறதா சொல்லிட்டேன்' என்று கனவு ஈடேற ஆவலுடன் காத்திருக்கிறார் இன்றைய கல்லூரி மாணவியான ஜெயலெட்சுமி....

**- மன்னை பாண்டியன்**

# தங்கள் கிராமத்துக்கு தாங்களே சாலை அமைத்துக் கொண்ட இளைஞர்கள்!

எழுச்சி மிக்க இளைஞர்கள் ஒன்றிணைந்து தங்களது கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வசதிகளைத் தாங்களே செய்து கொடுக்கும் அதிசய செயல்கள் அவ்வப்போது அரங்கேறுவது உண்டு.

அப்படி, திருவாரூர் மாவட்டத்தில் வாட்ஸ் அப் குரூப் மூலம் இணைந்த வெளிநாடு வாழ் இளைஞர்கள் கொடுத்த ஊக்கத்தால், சொந்த கிராமத்திற்குச் சாலை அமைக்கும் பணியை அப்பகுதி இளைஞர்கள் தொடங்கி நடத்தியுள்ளனர்.

வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததை அடுத்து கடந்த மாதம் தமிழகம் முழுவதுமே கனமழை வெளுத்து வாங்கியது. குறிப்பாக டெல்டா மாவட்டங்களில் பெய்த கனமழையால் நீர் நிலைகளில் உடைப்பு ஏற்பட்டு, கிராமங்களுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் வீடுகள், விளைநிலங்கள், சாலைகள், தரைப்பாலங்கள் சேதமடைந்தன.

மன்னார்குடி அருகே குமட்டித் திடல் ஊராட்சிக்குட்பட்ட புத்தகரம் கிராமத்தில் சுமார் 3 கிலோ மீட்டர் சாலை மிகவும் மோசமான நிலையில் இப்படி பலகாலமாக இருந்து வந்தது.



ஏற்கனவே மண் சாலையான இது, மழைக்காலம் வந்துவிட்டாலே சேறும், சகதியுமாக மாறி வாகன ஓட்டிகளுக்கு பெருஞ் சிரமத்தைக்கொடுத்துவருகிறது.

ஆம்புலன்ஸ் மற்றும் பள்ளி, கல்லூரி செல்லும் வாகனங்கள் கூட சென்று வர முடியாத அளவிற்கு புத்தகரம் சாலை மிகவும் பழுதடைந்து காணப்படுகிறது.

புத்தகரம் கிராமத்தின் இந்த நிலையை மாற்ற வேண்டுமென அந்தக் கிராமத்து இளைஞர்கள் முடிவெடுத்தனர். இதற்காக வெளிநாட்டில் வேலை பார்த்து வரும் இளைஞர்களிடம்

நிலையை விளக்கியுள்ளனர்.

ஆம், புத்தகரம் கிராமத்தைச் சேர்ந்த நிறைய இளைஞர்கள் வெளிநாடுகளில் வேலை பார்த்து வருகின்றனர். அவர்கள் இன்றளவும் கிராமத்து இளைஞர்களுடன் 'புத்தகரம் 360கு' என்ற வாட்ஸ் அப் குரூப் மூலமாகத் தொடர்பில் உள்ளனர்.

குவைத், துபாய், மலேசியா, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் வேலை பார்க்கும்புத்தகரம் இளைஞர்கள் நிதி உதவி அளித்து ஊக்கப்படுத்தியுள்ளனர். வெளிநாட்டு நண்பர்கள் கொடுத்த நிதியின் மூலமாக 2 லட்சம் ரூபாய் திரட்டடப்பட்டு, தார்ச்சாலை அமைக்கும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

இளைஞர்களின் கூட்டு முயற்சியைத் தட்டிக்கொடுத்துப் பாராட்டிய கிராமத்தினர், தங்களால் முடிந்த பங்களிப்பையும் வழங்கியுள்ளனர்.

இளைஞர்களுடன் கரம் கோர்த்து ஒட்டுமொத்த கிராமமே களமிறங்கியது குறித்து கிராமத்தினர் கூறுகையில்,

"இந்த சாலையில் மாணவ, மாணவிகள் பள்ளிக்குச் செல்லும் போது விபத்துக்கள் ஏற்படுகிறது. இதனால் எங்களது கிராம இளைஞர்களும், வெளிநாடு வாழ் இளைஞர்களும் ஒன்றிணைந்து சாலையை சீரமைக்க முடிவெடுத்தனர்.

"அதற்கு உதவும் விதமாக கிராம மக்களும் தங்களால் ஆன பணத்தைக் கொடுத்து உதவினர். 100 நாள் வேலைத் திட்டத்தில் பணியாற்றுபவர்கள் கூட தங்களால் ஆன 100 ரூபாயைக் கொடுத்து உதவி உள்ளனர்" என தெரிவிக்கின்றனர்.

இளைஞர்கள் முன்னெடுத்த இந்த பணிக்கு ஆதரவாக கிராமத்தில் உள்ள பெண்களும் களமிறங்கியுள்ளனர். தனது சொந்த கிராமத்திற்கு தார்ச்சாலை வேண்டி இளைஞர்களுடன் இணைந்து கிராமத்து பெண்களும் தங்களால் ஆன உதவிகளைச் செய்து வருகின்றனர்.

எந்த சம்பளமும் பெறாமல், சாலை அமைக்கத் தேவையான வேலையை செய்து வருகின்றனர். 650 மீட்டருக்கு சாலை அமைக்க



இதுவரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு ஒரு லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளது.

கொடுப்பதற்கு மனமும், உழைப்பதற்கு திடமும் இருந்து அனைவரும் ஒன்றுபட்டால், முடியாது என்ற காரியம் எதுவும் கிடையாது என்பதை உறுதிபடுத்தி உள்ளனர் புத்தகரம் கிராம மக்கள்.

இதுவரை 650 மீட்டருக்கு சாலை அமைக்கப்பட்டுள்ள நிலையில், மீதமுள்ள தூரத்துக்கு அரசு தார்ச்சாலை அமைத்துக்கொடுக்க வேண்டுமென புத்தகரம்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்!

மூலம்: யுவர் ஸ்டோரி

**- அம்ரா பாண்டியன்**

# 2021: திரும்பிப் பார்க்க வைக்கும் நிகழ்வுகள்




2022ம் ஆண்டு பிறந்திருக்கிறது. இந்நிலையில் கடந்த ஆண்டு நடந்து முடிந்த 10 முக்கிய நிகழ்வுகளைத் திரும்பிப் பார்க்கலாம்.

*** முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்...**

தமிழக சட்டசபை தேர்தலில் திமுக அமோக வெற்றி பெற்று தமிழகத்தின் 13வது முதலமைச்சராக திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் பதவியேற்றுக் கொண்டார். பதவியேற்பு விழா நடைபெற்றது. “முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்” எனக்கூறி தமிழக முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவியேற்றுக் கொண்டார். ஏறத்தாழ 52 ஆண்டுகால பொது வாழ்க்கைக்கு பிறகு தமிழக முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவியேற்றுக் கொண்டதை கண்ட அவரது மனைவி துர்கா ஸ்டாலின், மகன் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் ஆனந்த கண்ணீர் விட்டனர்

*** சசிகலா விடுதலையும் அரசியல் விலகலும்...**

சொத்து குவிப்பு வழக்கில் சசிகலா 4 ஆண்டுகள் சிறை தண்டனையை முடித்துக்கொண்டு ஜனவரி 28 ஆம் தேதி விடுதலை ஆனார். சசிகலா விடுதலை ஆனதும் அதிமுகவை தனது கட்டுப்பாட்டிற்கும் கொண்டு வருவார் என பெரிய எதிர்ப்பார்ப்புகள் இருந்த நிலையில் அவர் அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்தார்

*** குன்னூரில் ராணுவ ஹெலிகாப்டர் விபத்து**



நீலகிரி மாவட்டம், குன்னூர் காட்டேரி மலைப்பாதையில் நடந்த ராணுவ ஹெலிகாப்டர் விபத்தில் முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத், அவர் மனைவி உட்பட மொத்தம் அந்த ஹெலிகாப்டரில் பயணித்த 14 பேரும் உயிரிழந்தனர். இந்த ராணுவ ஹெலிகாப்டர் விபத்து தமிழகம் மட்டுமின்றி இந்தியா முழுக்க பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. ராணுவ ஹெலிகாப்டர் விபத்து ஏற்பட்ட பகுதி முழுவதும் ராணுவத்தால் சீல்



வைக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

*** தமிழக சட்டசபை தேர்தல்: தோல்வியிலும் கமல் சாதனை**



தமிழக சட்டசபை தேர்தலில் கடும் இழுபறிக்கு பிறகு கோவை தெற்கு தொகுதியில் பாஜக வேட்பாளர் வானதி ஸ்ரீனிவாசன் வெற்றி பெற்றார். மிக சொற்ப அளவிலான வாக்குகளில் கமல்ஹாசன் தோல்வியை தழுவினார். இதில் ஆறுதல் பெறக் கூடிய விஷயங்கள் என்னவெனில் கமல்ஹாசன் சாதாரணமாக தோற்றுவிடவில்லை. கடுமையான டஃப் கொடுத்தே தோற்றுள்ளார். கமல்ஹாசன் மட்டும் வென்றிருந்தால் மக்கள் நீதி மய்யம் கட்சி முதல்முறையாக சட்டசபைக்குள் நுழைந்தது என்ற பெருமையை பெற்றிருக்கும்.




*** சென்னையை புரட்டி போட்ட மழை**

சென்னை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதியில் இடியுடன் கூடிய கனமழை காரணமாக கோயம்பேடு, எழும்பூர், அண்ணா நகர், கோடம்பாக்கம், நுங்கம்பாக்கம், உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக சாலைகளில் நீர் தேங்கியது. இதனால், சென்னையில் உள்ள பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இந்த மழையும் வெள்ளமும் 2015 ஆம் நிகழ்வை கண்முன் நிறுத்திவிட்டு சென்றது.



*** சர்ச்சையான ஜெய்பீம் படம்**

அக்னி கலச காலண்டரை ஜெய்பீம் படத்தில் வைத்ததற்கு கண்டனம் தெரிவித்து வன்னியர் சங்கத்தினரும் பாமகவினரும் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்ததுடன் நடிகர் சூர்யா மீது புகாரையும் கொடுத்தனர். எனினும் அக்னி கலச காலண்டரை நாங்கள் வேண்டுமென்றே வைக்கவில்லை. அது வன்னியர் சங்கத்தின் அடையாளம் என்பதும் எனக்கு தெரியாது. இதில் சூர்யாவுக்கு எந்த தொடர்பும் இல்லை என கூறிய இயக்குநர் ஞானவேல்ராஜா தான் யார் மனதையாவது புண்படுத்தியிருந்தால் அதற்கு வருந்துவதாக தெரிவித்திருந்தார்.

*** தமிழகத்திலும் ஒமைக்ரான்...**

உலகை தற்போது அச்சத்தில் ஆழ்த்தியுள்ள ஒமிக்ரான் கரோனாவின் பாதிப்பு, இந்தியாவிலும் வேகமாக அதிகரித்து தமிழ்நாட்டில் மேலும் ஒமிக்ரான் தொற்று உறுதி செய்யப்பட்டு மொத்த பாதிப்பு 45 ஆக உயர்ந்துள்ளது.

***முன்னாள் அமைச்சர்கள் வீடுகளில் ரெய்டு**

முன்னாள் அமைச்சர்கள் சி விஜயபாஸ்கர், எம்ஆர் விஜயபாஸ்கர், கேசி வீரமணி மற்றும் எஸ் பி வேலுமணி, தங்கமணி ஆகியோர் வீடுகளில் லஞ்ச ஒழிப்பு துறை போலீசார் சோதனை செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

*** வன்னியர் 10.5% இட ஒதுக்கீடு...**

தமிழ்நாட்டில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் மிகவும் பிற்படுத்தப்பட்ட வன்னிய சமூக மக்களுக்கு 10.5 சதவிகித இடஒதுக்கீட்டை கடந்த பிப்ரவரி மாதம் அ.தி.மு.க அரசு அளித்தது. ஆனால், வன்னியர் சமூகத்தினருக்கான 10.5 சதவிகித இடஒதுக்கீடு ரத்து செய்யப்பட்ட விவகாரம், பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் வன்னியர் அமைப்புகளிடையே அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. `இடஒதுக்கீடு ரத்து செய்யப்பட்டதற்கு தமிழ்நாடு அரசுதான் பொறுப்பேற்க வேண்டும் என்கின்றன வன்னியர் அமைப்புகள்.

**10. ஒலிம்பிக், பாரா ஒலிம்பிக் போட்டிகள்...**

டோக்கியோ ஒலிம்பிக் மற்றும் பாரா ஒலிம்பிக்ஸ்ல் இந்தியா சாதனைகளை படைத்தது. இதில் தமிழக வீரர்கள் மிக்கிய பங்கு வகித்தனர். ஜூலை மாதம் 23 தொடங்கி ஆகஸ்ட் 8 வரை ஒலிம்பிக் போட்டிகளும், பாரா ஒலிம்பிக்ஸ் போட்டிகள் ஆகஸ்ட் 24 தொடங்கி செப்டம்பர் 5 வரை நடைபெற்றன.




**– வைத்தியநாதன்**

# உலக சந்தையில் இந்தியாவை உயர்த்திப்பிடிக்கும் ரத்தன் டாடா!



“உங்கள் மீது யாரேனும் கற்கள் வீசினால், அதைக் கொண்டு கட்டடம் எழுப்புங்கள்!” இதைச் சொல்லியவர் இந்தியாவில் மட்டுமே காலூன்றியிருந்த ஒரு வியாபார குழுமத்தை உலகெங்கும் எழுப்பி, அக்குழுமத்தையே உலக சந்தையில் இந்தியாவின் அடையாளமாய் மாற்றிய ரத்தன் நாவல் டாடா.

நம் உணவில் உப்பாய், தேநீராய், நம் கையில் கடிகாரமாய், நம் செல்போனில் சிம் கார்டாய், நம் வீட்டுத் தூணில் இரும்பாய், நாம் பயணிக்கும் காராய், நம் டிவியில் டி.டி.எச்சாய், நாம் அணியும் நகையாய் ஒவ்வொரு இடத்திலும் கால் ஊன்றி தடம் பதித்த டாடா சன்ஸின் தலைவர் ரத்தன் டாடாவின் சிறப்புகள் இதோ...



1937ல் சூரத் நகரில் நாவல் டாடாசுனூ தன்மதியருக்குப் பிறந்த டாடா, தனது நிர்வாக மேல்படிப்பை ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் 1975ல் முடித்தார். அவர் அங்கு மேற்படிப்பை முடித்தவுடனேயே மிகப்பெரிய நிறுவமான மிஙிவில் அவருக்கு வேலை கிட்டியது. ஆனால் இந்தியாவில்தான் பணியாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு தாய்நாட்டிற்கே திரும்பினார். தனது குடும்ப நிறுவனமான டாடா குழுமத்தில் பணியிலமர்ந்தார் ரத்தன் டாடா. சொந்த நிறுவனமாய் இருந்தாலும் அடிப்படையான சிறிய பொறுப்புகளையே செய்து வந்தார் அவர். அதனால் உழைப்பின் அருமையை அறிந்திருந்தார்.

30 வருடம் டாடா குழுமத்தின் பல்வேறு முன்னேற்றங்களுக்கு பங்காற்றிய ரத்தன் டாடா, 1991ல் டாடா குழுமங்களின் தலைவராக, நிறுவனரும் அன்றைய தலைவருமான ஜே.ஆர்.டி டாடாவால் நியமிக்கப்பட்டார். அதன்பிறகு நடந்ததெல்லாம் உலகமே வியந்த அசுர வளர்ச்சி.அதுவரை இந்தியாவின் மிகப்பெரிய நிறுவனங்களுள் ஒன்றாக இருந்த டாடா குழுமத்தை உலகின் பார்வைக்கு எடுத்துச் சென்றார். “சிறிய முன்னேற்றங்கள் பற்றி யோசிப்பது எனக்குப் பிடிக்காது” என்பார் டாடா. “எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் மிகப்பெரிதாய் அனைவரும் வியக்கும் வகையில் இருக்க வேண்டும்” என்று கூறுவார். அப்படித்தான் மிகப்பெரிய அடிகளை உலக மார்க்கெட்டில் எடுத்து வைத்தது டாடா குழுமம். உலகின் ஒவ்வொரு நாட்டிலும்,ஒவ்வொரு சந்தையிலும் தனக்கான

வாய்ப்புகளை கண்டறிந்தார். இரும்பு, மென்பொருள், கெமிக்கல், தேநீர், கார்கள் என அனைத்துத் துறையிலும் அசுர வளர்ச்சி கண்டது இந்நிறுவனம். இவர் பொறுப்பேற்ற பின் டாடா குழுமம் கால் வைக்காத துறை இல்லை என்றே சொல்லலாம்.

ஆண்டுக்கு ஒரு பில்லியன் அமெரிக்க டாலர் வருவாய் ஈட்டிய முதல் இந்திய மென்பொருள் நிறுவனம் என்ற சாதனையைப் படைத்தது டாடா குழுமம். சொகுசுக் கார்களைத் தயாரிப்பதில் வல்லுநர்களான லேண்ட்ரோவர், ஜாக்குவார் ஆகிய கம்பெனிகளின் இந்திய உரிமையை 2008ல் வாங்கினார் டாடா. இது ஆட்டோமொபைல் உலகில் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்தியது. இந்திய கார்களுக்கு வெளிநாட்டில் மிகப்பெரிய மார்க்கெட்டை ஏற்படுத்தினார். கோரஸ் என்ற உலகின் மிகப்பெரிய இரும்பு உற்பத்தி நிறுவனத்தை டாடா வாங்க, உலகின் முன்னனி இரும்பு உற்பத்தியாளராய் உருப்பெற்றது டாடா ஸ்டீல்ஸ். உலகமயமாக்கலால் பல நிறுவனங்கள் இந்தியாவிற்குள் காலடியை எடுத்து வைக்க, உலக சந்தையில் சத்தமின்றி தன்னிகரற்ற ஒரு இடத்தைப் பெற்றது டாடா குழுமம். தற்போது இந்நிறுவனத்தின் வருவாயில் 65% வெளிநாடுகளிலிருந்துதான் ஈட்டப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்திய பொருளாதார வளர்ச்சியில் இவரது பங்கீட்டைப் பாராட்டி இந்திய அரசு இவருக்கு பத்மபூஷண் விருதும்,பத்ம விபூஷண் விருதும் வழங்கி கௌரவித்தது.

அனைத்து முன்னனி கார் நிறுவனங்களும் கோடிகளில் கார்களைத் தயாரித்துக்கொண்டிருக்க, மாற்றுத்திசையில் பயணித்தார் டாடா. சாமானிய மனிதனும் நான்கு சக்கர வாகனத்தில் செல்ல வேண்டும் என்று கருதினார். அதனால் உதித்ததுதான் 'டாடா நானோ' திட்டம். வெறும் ஒரு லட்ச ரூபாய்க்கு கார்கள் வெளிவரும் என்று டாடா நிறுவனம் அறிவித்தபோது உலகமே கேலி செய்தது. தரம் குறைவாயிருக்கும், சிறு அடிபட்டாலும் கார் நொறுங்கிவிடும் என பழித்தனர். இது நிச்சயம் சாத்தியமில்லை என்று அனைவரும் சொல்ல, அனைத்தையும் பொய்யாக்கி இந்திய சாலைகளில் நானோவை கம்பீரமாய் வலம்வர வைத்தது டாடா நிறுவனம். விலை முன்பு சொல்லப்பட்டதை விட சற்றுக் கூட இருந்தாலும் (1.25 லட்சம்) , உலகின் மிகவும் குறைந்த விலை கார் என்ற பெருமையை தனதாக்கியது நானோ. விலை குறைவு என்றாலும் தரத்தில் எந்தக் குறையும் இல்லாமல் வெற்றிகரமான மாடலாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டது நானோ. உலகின் அனைத்து கார் கம்பெனிகளும் டாடாவிற்கு தலை வணங்கின.



மும்பை குண்டுவெடிப்பில் பாதிக்கப்பட்ட தாஜ் ஹோட்டல்களும் டாடா நிறுவனத்திற்கு சொந்தமானவையே. அவற்றை சரிசெய்வதற்காக பொது டெண்டர் விடப்பட்டபோது பாகிஸ்தானைச் சார்ந்த இரு பெரும் நிறுவனங்கள் அவற்றிற்கு விண்ணப்பித்திருந்தன. அந்த டெண்டெரை தனதாக்கும் பொருட்டு அந்நிறுவனங்களைச் சார்ந்த இருவர் டாடாவைப் பார்க்க அவர் அலுவலகத்திற்குச் சென்றுள்ளனர். பாகிஸ்தானியர்கள் என்பதால் அவர்களை வெகுநேரம் காக்கவைத்த டாடா, பின்னர் அப்பாயின்ட்மென்ட் இன்றி யாரையும் பார்க்க முடியாது என்று மறுத்துவிட்டார். அவர்கள் இருவரும் அன்றைய தேதியில் அமைச்சராய் இருந்த ஆனந்த் ஷர்மாவை அணுக,டாடாவிடம் இதுபற்றி பேசியுள்ளார் அமைச்சர். அதற்கு டாடா அளித்த பதில் நம்மை மெய்சிலிர்க்கச் செய்யும். "உங்களுக்கு வேண்டுமானால் இது கூசாமல் இருக்கலாம். ஆனால் எனக்கு அது அவமானம்" என்று டாடா கூற, அதிர்ந்து போனாராம் அமைச்சர்."என்னால் இறக்கை விரித்து பறக்க முடியாத நாளே, என் வாழ்க்கையின் சோகமான நாள்" என்பார் ரத்தன் டாடா. அவரது சிறகுகள் இன்னும் பல்லாண்டு காலம் பல இடங்களில் விரிந்து பறக்க மித்ரா டைம்ஸ் மாத இதழ் சார்பில் வாழ்த்துகள்!

கட்டுரையாளர்: எஸ்.ஜானகி

# உழைப்பால் உயர்ந்த திரு.பாலமுருகன் IFS



சென்னையில் கீழ்கட்டளையை பூர்வீகமாகக் கொண்டவர் பாலமுருகன். தனது கடின உழைப்புக்குப் பிறகு தனது லட்சியமான ஐ.எஃப்எஸ் அதிகாரியாக இன்று வளர்ந்து நிற்கிறார்.

சிறுவயதில் அவருடைய அப்பா, தன் அம்மா மற்றும் 7 குழந்தைகளை தன்னந்தனியாக விட்டுச் சென்றுவிட்டார்.

அந்தக் குழந்தைகளில் ஒருவர் தான் பாலமுருகன்!

இன்று அவர் ராஜஸ்தானில் துங்கர்பூர் வனப் பிரிவில் திறமையான ஒரு அதிகாரியாகப் பணியாற்றி வருகிறார். நீங்கள் வளரும் காலத்தில் என்ன மாதிரியான சவால்களை சந்தித்தீர்கள் என்று பாலமுருகனிடம் கேட்டபோது,

“நான் ஒரு நாள் ஒரு செய்தித்தாள் விற்பனையாளரை அணுகி, தமிழ் செய்தித்தாளைப் படிக்க வேண்டும் என்று கோரினேன். அதன்மூலம் பொது அறிவை வளர்த்துக் கொள்ளலாம் என்ற எண்ணம்! அதற்கு அவர் ‘மாதா மாதம் 90 ரூபாய் செலுத்த வேண்டும்‘ என்றார். நான் பணமில்லை என்றதும், எனக்கு செய்தித்தாளை விநியோகிக்கும் வேலை கொடுத்து, மாதம் 300 ரூபாய் தருவதாகச் சொன்னார். அந்த வேலையில் உடனே சேர்ந்தேன்.

“பல சமயங்களில் இரவு உணவில்லாமல் தூங்கிய நாட்கள் உண்டு. ஆனால் ஒருபோதும் செய்தித்தாள்களை படிக்காமல் தூங்கச்சென்ற நாட்கள் இருந்ததில்லை” என தன்னுடைய கடந்த கால நாட்களை நினைவுகூர்கிறார் அவர்.

2011ஆம் ஆண்டு மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜியில், எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிகேஷன் இன்ஜினியராக பட்டம்



பெற்றார் பாலமுருகன். கேம்பஸ் இன்டர்வியூ மூலமாக வேலையும் கிடைத்தது.

இருப்பினும், அவர் விரைவில் எம்.என்.சி.யிலிருந்து தனது வேலையை விட்டுவிட்டார்.

“நான் இதைப் பற்றி மோசமாக நினைக்கவில்லை. நான் ஐந்து சகோதரிகள் மற்றும் இரண்டு சகோதரர்களுடன் குடும்பத்தில் ஆறாவதாக பிறந்தவன். எங்கள் குடிகார தந்தை ஒருபோதும் எங்களை கவனித்துக்கொண்டதேயில்லை. என் அம்மாவின் உழைப்பால் தான் நான் இன்று ஒரு நல்ல நிலையில் இருக்கிறேன்.

“கடந்த 2013ஆம் ஆண்டு அரசியல் ரீதியாக பலம் வாய்ந்த நபர் ஒருவர் எங்கள் நிலத்தை ஆக்கிரமிக்க முயன்றார். நிலம் ஆக்கிரமிக்கப்பட்டவுடன், எங்கள் வீட்டிற்குள் நுழைய வெறும் பத்து அடி இடம் மட்டுமே எங்களுக்கு இருந்தது. அப்போது காவல்துறை, எங்களுக்கான நிலத்தை பெற்றுத்தரும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்ததில்லை.

“நான் அலுவலகத்தில் மதிய உணவு இடைவேளையின் போது புகார் அளித்தேன், அதைமறந்தும்விட்டேன்.சுமார் 45நாட்களுக்குப் பிறகு, அதிகாரிகள் எங்கள் வீட்டுக்கு வந்து பார்வையிட்டு ஆவணங்களைக் கேட்டனர். மேலும் ஆவணங்களை சரிபார்த்தபின், நிலத்தில் எந்த அத்துமீறலும் நடைபெறாமல் இருக்க போதிய நடவடிக்கைகளை எடுத்தனர்.

“இதுதான் நான் சிவில்சர்விஸ் சேர உந்துதலாக இருந்தது. அதே ஆண்டில், வேலைக்காக ஆஸ்திரேலியா செல்ல எனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது.

“படிப்பு செலவுக்காகவும், குடும்பத்துக்காகவும் பணத்தை சம்பாதிக்க சிலநாட்கள் ஆஸ்திரேலியாவில் பணிபுரிந்தேன். பணம் சேர்ந்ததும் இந்தியாவுக்கு வந்தேன்.

“3 வருடம் முயற்சி செய்தும் சிவில் சர்வீஸஸ் தேர்வில் வெற்றி பெறமுடியவில்லை. இறுதியாக 2019இல் ஐஎஃப்எஸ் தேர்வில் வெற்றி பெற்றேன்,” என்கிறார் பாலமுருகன்.

**– ஜெய சுபா**

**தொலைபேசி எண்:99431 20025**

# திருமணத்தடை, குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் வழிபட வேண்டிய ஆலயம்

தினமும் அரநெறியப்பரை நமிநந்தியடிகள் என்ற சிவத்தொண்டர்வழிபாடு செய்து வந்தார். ஒருமுறை அரநெறியப்பர் கோயிலுக்கு மாலை வேளையில் வழிபாடு செய்ய வந்தார். கோயில் விளக்கு ஒளி மங்கலாகி, நெய் தீர்ந்து போகும் நிலை ஏற்பட்டது. அப்போது அடிகள் விளக்கேற்ற யாராவது வருகிறார்களா என பார்த்தார். யாரும் வரவில்லை.

தொலைவிலுள்ள தமது வீட்டிற்கு சென்று நெய் வாங்கி வருவதற்குள் நன்றாக இருட்டிவிடும். அத்துடன் விளக்கும் அணைந்துவிடும் என்று நினைத்த அவர் கோயில் வாசலில் இருந்த வீட்டிற்கு சென்று சிறிது நெய் கேட்டார்.

அந்தக்காலத்தில் கோயிலை சுற்றி சமணர்கள் அதிகம் வசித்து வந்தனர். இவர் நெய் கேட்ட சமணர் வீட்டை சேர்ந்தவர்கள், “கையில் தீ ஏந்தி நடனம் செய்யும் உங்கள் இறைவனுக்கு விளக்கு தனியாக வேண்டுமா? தீயின் ஒளியே போதுமே.

அப்படியும் நீ விளக்கு ஏற்ற வேண்டுமானால், கோயில் எதிரில் உள்ள குளத்து நீரை எடுத்து தீபத்தை ஏற்றுவது தானே?" என கேலி பேசினர். இதனால் வருத்தமடைந்த அடிகள் கோயிலுக்கு வந்து, ”இறைவா! உனக்கு விளக்கேற்ற நெய் கேட்க சென்ற வீடுகளில், என்னுடன் சேர்த்து உன்னையும் கேலி செய்கின்றனர்.

இதையெல்லாம் கேட்பதற்கு நான் என்ன பாவம் செய்தேன்?" என அழுது புலம்பினார். அப்போது இறைவன் அசரீரியாக, அடிகளே கலங்காதே. அவர்கள் கூறியபடி இங்குள்ள குளத்து நீரை எடுத்து எனது சன்னதியில் விளக்கேற்று என கூறினார். இதைக்கேட்டவுடன் அடிகளுக்கு மிகுந்த சந்தோஷம் ஏற்பட்டது.

மாதம் ஒரு திருத்தலம்

உடனே ஓடிச்சென்று அங்கிருந்த சங்கு தீர்த்தம் எனப்படும் குளத்திலிருந்த நீரை எடுத்து வந்து விளக்கில் ஊற்றி தீபத்தை தூண்டிவிட்டார். தீபம் முன்பை



விட பலமடங்கு பிரகாசமாக எரிந்தது. அத்துடன் அங்கிருந்த பல விளக்குகளிலும் நீரை ஊற்றி தீபம் ஏற்றினார்.

கோயில் முழுவதும் சூரிய ஒளி பட்டது போல் விளக்குகளிலும் நீரை ஊற்றி தீபம் ஏற்றினார்.

கோயில் முழுவதும் சூரிய ஒளி பட்டது போல் பிரகாசித்தது. இதை கேள்விப்பட்ட சமணர்கள் இறைவனின் திருவிளையாடலை கண்டு ஆச்சரியமடைந்தனர். சோழமன்னன் அடிகளின் பக்தியை கேள்விப்பட்டு, அவரையே கோயிலுக்கு தலைவராக்கி, கோயிலில் புகழ் மென்மேலும் பரவவும், திருவிழாக்கள் சிறப்பாக நடக்கவும் உதவினான்.

இறைவன் அடிகளின் பக்தியில்





மகிழ்ந்து 63 நாயன்மார்களில் ஒருவராக்கினார்.

இக்கோயிலில் செருத்துணை நாயனார் என்ற அடியார் இறைவனுக்குப் பூத் தொண்டு செய்யும் புனிதப் பணியை மேற்கொண்டிருந்தார். ஒருநாள் மாலையில் நாயனார் மாலை தொடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது மன்னன் கழற்சிங்கன் தன் மனைவியுடன் அரநெறியப்பரை

வணங்க வந்திருந்தான். அப்போது மாலை தொடுக்கும் இடத்தில் சிதறிக் கிடந்த பூக்களை எடுத்து அரசியார் முகர்ந்து பார்த்தார். இறைவனுக்கான மலர்களை அரசியார் முகர்ந்ததால் சினம் கொண்ட கழற்சிங்கன் தன் கையிலிருந்த கத்தியால் அரசியின் மூக்கை அரிந்தார்.

அதுமட்டுமா, அரசியின் கரங்களையும் வெட்டினான். இவர்களது தூய சிவபக்தியால் நெகிழ்ந்த இறைவன் அனைவரையும் ஆட்கொண்டதாக பெரிய புராணம் சொல்கிறது. அரன் நெறி என்பதே அரநெறியாயிற்று. சிவபெருமானை அடையும் நெறியாகிய சிவ நெறியையே இது குறிக்கிறது,

இப்பகுதியைச் சேர்ந்த மன்னன் ஒருவன் சிவபெருமானைக் குறித்து கடுந்தவம் மேற்கொண்டான். அவனுடைய தவத்திற்கு இரங்கிய சிவபெருமான் அவனுக்கு காட்சி கொடுத்து அருளினார். மன்னன், தான் ஸ்தாபிக்கும் லிங்கத்தில் எழுந்தருளும்படி இறைவனை பிரார்த்தித்துக் கொண்டான். அவ் வாறே இறைவன் சலியாமல் எழுந்தருளியமையால் இத்தலம் அசலேசம் என்றும், இறைவன் அசலேஸ்வரர் என்றும் அழைக்கப்படுகிறார்.

ஆலய அமைப்பு: திருவாரூர் பெரிய கோயிலுக்குள்ளேயே இரண்டாம் பிராகாரத்தில் தென் கிழக்குத் திசையில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது இவ்வாலயம். வாயிலில் கொடிமரம், பலிபீடம், நந்தி மண்டபம் உள்ளது. கோயில் கருவறை, அர்த்த மண்டபத்துடன் காணப்படுகிறது.

மூலவர் மேற்கு நோக்கி சுயம்பு மூர்த்தியாக அரநெறியப்பர், அசலேஸ்வரர் என்ற பெயர்களுடன் எழுந்தருளியுள்ளார்.

அமைவிடம்: திருவாரூர் நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள தியாகராஜசுவாமி திருக்கோயிலின் உள்ளே அமைந்துள்ளது இவ்வாலயம். புதிய பேருந்து நிலையத்தில் இருந்து மயிலாடுதுறை செல்லும் பேருந்தில் சென்றால் ஆலய வாசலில் இறங்கலாம்.

**ஆலய முகவரி:**

அருள்மிகு அசலேசுவரர் திருக்கோயில்,

தியாகராஜசுவாமி திருக்கோயில் வளாகம்,

திருவாரூர் அஞ்சல்,

திருவாரூர் மாவட்டம்- 610 001.

இவ்வாலயம் தினமும் காலை 6 மணி முதல் 12 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8.30 மணி வரையிலும் திறந்திருக்கும்.

EPISODE: 8

# HISTORY OF ANCIENT KINGDOM



Concept by:

Dr. V. BALATHANDAYUTHAPANI
DCP RTD
Cell: 7904354721

The Kushanas Empire reached its zenith during the periods of Kanishka who became the king in 78 b.c. . During Kanishka's reign, the Kushanas Empire expanded from Central Asia to the east into Ganga valley and south wards into the Malwa region. Kushanas influence was felt in western and central India as well, where the Shaka kshatrapas acknowledged the overlordship of their Kushanas. The discovery of Kushana coins as far east as Bengal and Orissa does not necessarily indicate that their political control extended far in the east. The presence of diamond mines in Akara( eastern Malava)and the trade potential of the lower Indus County led to Kushanas expansion into these areas. Kanishka' Empire included most of Afghanistan, the eastern part of Xinjiang in China, and extended upto the north of the Oxus river in Central Asia. Towards the end of his long reign, Kanishka seems to have led an unsuccessful military expedition into Central Asia against the Chinese. He was defeated by the general Pan- Chao and forced to pay tribute to Emperor Ho- to.

Kanishka is celebrated in Budhist texts as a great patron of Buddhism. He is supposed to have enshrined the Buddha 's relics in a stupa at Purushapura, which became the center of a major monastery. Kanishka also extended his rule in Central Asia towns of Kashgar , Yarkand and Kottan which are all now in China.



The Kushanas Empire began as a central Asian Kingdom and expanded into Afghanistan and north- western India. The centre of the huge empire was Bactria. In India, the important political centres of Kushana power were Purushapura( Peshawar) and Mathura.

The present Chinese hyper nationalist agenda is reviving its ancient trade route of Silk road :

SILK road was the high way of economic activities between the ancient China and the ancient Rome.. the route roughly passes through the Gobi desert in china till lombardy plain in Roman kingdom ( present day Italy) name silk road is given due to the increasing demand for chinese shandong silk in the Roman empire.. But the ancient chinese silk road was controlled by Indian rulers for more than 4 centuries.. the customs duty levied by the Indian kings made the goods traded between the Rome and China very expensive . Indian king Kanishka of the Kushana dynasty had his territory extending till Yaadgar, kashgar and kota.. all these three ancient cities are located in the present day Xinkiang - Uighur autonomous province of China..

China claims itself that it has the right to rule and control territories even outside its boundary like in Tawang on Arunachal pradesh( at one point on ancient and medieval history tawang was controlled by Song DYNASTY of china)

By the same yardstick India must also claim the Xinkiang province which in turn was ruled by Indian king Kanishka . The CPEC china pakistan economic cooperation infrastructure must also include Indian component ..so that the shared history of india and china works to the advantage of India too,

instead of confronting with the Chinese.[OBOR and CPEC..

OBOR : one belt one road , modern day version of silk road

CPEC : CHINA PAKISTAN ECONOMIC COOPERATION]

After Kanishka, his successors like Vasihka, Huvishka, Kanishka-2 and Vasudeva were not as effective as Kanishka and hence Kushanas lost their identity slowly and their place was replaced by Shaka's in the first century and were ruling Western India for a century.

SATAVAHANA

After the DEMISE of Asoka in 230 b.c, the Satavahanas established their independent kingdom with the support of the Tamils in the year 230 b c.They ruled Deccan for nearly 450 years from 230 b.c to 220 A D. with Tamil and Prakrit as their official languages. The first Satavahana king Simuka ruled from 230 B c to 207and effectively ruled Deccan by not allowing the northern kingdoms to invade further south. The next important ruler Satakarni ruled from 180 b.c to 124 b.c

The famous Kalinga King Kharavelan has mentioned in his Hatigumpha inscription that he had defeated this Satakarni. After the death of Kharavelan , this Satakarni conquered Kalinga and he also conquered western Malava from the Sunga dynasty who ruled Magatha Empire during the period of Satakarni. He is said to have conquered Madhya Pradesh and chased the Sakas( western empire) out of Pataliputhra. The Satavahanas after him were weak until Pulumavi who ruled from 30 b.c to 6 b.c, had many victories



and later conquered Pataliputhra of Magadham Empire.

Mamulanar's poem in Akam-31 proves that the Tamil Vendhars protected the Deccan region , known as 'Mozhipeyar Theyam'. Hence there must have been a confederacy among the Tamil kingdoms. The Hatigumpha inscription of the famous Kalinga king Kharavelan states about the confederacy of the Tamil kingdoms. Kharavelan has claimed that in the 11th year of his reign, he had broken the 1300 years old confederacy of the Tamil kingdoms and seized the city of Pithunda from Tamil confederacy, founded by the ancient kings of Kalinga and ploughed the city by using asses. Considering that the period of the Hatigumpha inscription was around 165 b.c, the confederacy of the Tamil kingdoms must have been for a long time running to thousands of years.

Kharavelan's inscription reveals that he feared about the confederacy of the Tamil kingdoms . It also describes how he initially thought that the Tamils could never be defeated. This is why he ploughed the city using asses , to ensure that it cannot be reclaimed by the Tamils.But later the Tamils recaptured Pithinda using their powerful navy. Although Pithunda was a city of Kalinga, Kharavelan did not capture it during the first 10 years of his reign because he was aware of the triumphant victory of the Tamils against the Mouryan Empire. Therefore he did not want to create a rivalry between his forces and the Tamil forces.

This is why , initially, despite winning over The Magadha and the Satavahana Empire, he did not attempt to conquer Pithunda, which was under the control of the Tamils. Only in the 11th year of his reign, after he knew about the disunity among the Tamil Moovendhar dynasties which weakened the Tamil confederacy did he launch an attack and conquer Pithunda, a city of Kalinga.

North Eastern India history during ancient India:

During the same period of first and second century b.c ., various Tribal kingdoms of Mongoloid race , had their independent kingdoms with their own identity and the detailed accounts of North East India will be discussed.

In the coming Chapter, we will discuss about the other contemporary world civilizations including Rome.

In the chapter-3, I briefly mentioned about the 10 other ancient civilizations existed in the world during b.c when our ancient Tamil civilization existed in the same period. Now we will see about them.

MESOPOTAMIA AND SUMER.

One of the world's earliest civilizations grew up on the fertile plains between the rivers Tigris and Euphrates. Now situated in Iraq, this area became known as Mesopotamia " the land between the two

rivers. In about 5000 b.c, a group of people called the Sumerians settled in the southern part of Mesopotamia. By about 3500 b.c, the original farming villages had grown into thriving towns and cities. Some of the largest settlements such as Ur and Uruk grew into independent city-states. From about 2900 b c , Kings ruled for their life. One of the famous King by name Ur Nammu constructed temple for the Moon which was worshipped as the home of Moon god which tells that both ancient Tamilians and Sumerians were having similarities in aspects of human life. The story of Gilgamesh , a Sumerian King and his quest to find the secret of eternal life , in which Gilgamesh is told of a plant growing at the bottom of the sea that will bring immortality. Gilgamesh finds the plant , but before he use it , it is stolen by a snake. The Sumerians were expert mathematicians and astronomers. The Sumerians were having magnificent jewellery made from gold and silver which were discovered when the Royal Tombs at Ur were excavated. The Sumerians were equally well like our ancient Tamilians and were leading excellent life till the invasions from Greece taken place.

Ancient Egypt

The ancient Egyptian depended on the Nile River for

drinking Water and irrigation, and on its Annual flooding that deposited rich , silty soil along its banks. Here farmers cultivated wheat and barley, flax( for linen) , fruit and vegetables. They also raised cattle, sheep and goats.

The first villages of ancient Egypt were established some 7000 years ago. In time these small settlements formed two kingdoms, Lower Egypt in the Nile Delta and Upper Egypt along the river valley.

In about 3100 B.C, King Menes, the ruler of Upper Egypt, United the two kingdoms and established DYNASTY - 1, the first dynasty (line of kings) of ancient Egypt. The king was most powerful person in ancient Egyptian society and was worshipped as the God Horus, in human form. From 1554 b.c , the king was given the honorary title of Pharaoh and were RULING Egypt for Thousands of years. Egypt along with India, China and Mesopotamia ( present day Iraq) were all called as most civilized countries of the then world. In the first century B. C, in Egypt, Ptolemy the 12 'th while he was in death bed , he made his daughter Cleopatra who was 18 years old then , made her as the Queen of Egypt in 52 B. C. But it was not liked by Egyptian and hence Ptolemy 12, made his son Ptolemy 13 , who was 14 years old then, effected marriage with his own sister Cleopatra which was accepted by the People of Egypt. During that time the whole of Northern Africa including Egypt was under the control of Roman Empire. We will discuss about Cleopatra in the latter Chapter's.

MEGALITHIC EUROPE

From about 4500 b.c, people in Europe began building monuments of massive, standing stones called MEGALITHIC.These were placed in circles or upright next to each other , with another stone laid horizontally on top. They were leading a good life from 2800 b.c Druids used MEGALITHIC stone circles, hundreds of years after they were built. The druids were the religious leaders of the Celtic peoples of Europe.

Similarly Minoans and Mycenaeans were other two ancient civilizations of Europe.



ANCIENT CHINA

The earliest civilizations in China grew up along the banks of three major rivers, Chang Jiang(Yangtze), Xi Jiang(West River,,) and Huang He(Yellow River)

From about 2205 b.c, China was ruled by a series of dynasties. The first for which historians have reasonable evidence is the Shang DYNASTY, which began in 1766 b.c The Shang ruled China for more than 400 years.At the end of the 11th century b.c, however , the Shang were conquered by the ZHOU DYNASTY and their rule lasted until 221 b.c. During this time many wars were fought between the rival kingdoms, that made up the Zhou lands , but it was also a period of economic growth

and of trading success, with Chinese silk, precious jade and fine porcelain being traded abroad.By 221 b.c , the kingdoms of China had been at war for more than 250 years Gradually, the Qin ( or Ch'in) , a war - like dynasty from the northwest , United the country and established the empire that gives China its name. Shi Huangdi, reorganized government and standardized money weights and measures. A road and canal network was also built to link up the various parts of the country. THE GREAT WALL OF CHINA , BUILT ACROSS THE NORTHERN BORDER TO KEEP THE HOSTILE HSUNGNU PEOPLE ( THE HUNS) OUT.THE CONSTRUCTION OF GREAT WALL ENDED IN 212 B.C

Shi Huangdi was a brilliant but ruthless general and politician burning books and putting scholars put to death because their ideas did not match his own. However the Qin Dynasty was overthrown in 206 b.c, four years after Shi Huangdi's death.

The prophet and philosopher CONFUCIUS, born in about 551 B .C, dedicated himself to teaching people how to live peace with other. His thoughts and teachings were incredibly influential in China until the start of the 20 th century A.D. IT MAY BE RECALLED THAT THE SAME PERIOD OF CONFUCIUS, IN MAGADHAM KINGDOM BOTH GOWTHAMA BUDHA ( BORN IN 582 B.C) AND VARDHAMANA MAHAVEERA( BORN IN 54O B.C) WERE RESPONSIBLE FOR THE ESTABLISHMENT OF BHOWTHAM AND JAINAN RESPECTIVELY. BUDHAM AND JAINAM WERE SPREADING LIKE WILD FIRE IN SOUTH ASIA INCLUDING CHINA.In fact Bhahian and Youanzhuvang from China visited in India in Third and Sixth centuries A.D A.D during the rule of Gupta's and Harsha and wrote high about India including Nalandha Library located in Magadham.

Similarly ANCIENT AMERICAN from 1200 b c were RULING, the Olemecs in western Mexico and the Chavin along the coast of northern Peru.

In the next chapter we will see about KALAPPIRAR of Ancient Tamilagam.




# எதிர்மறை எண்ணங்களை எதிர்கொள்வது எப்படி?

எவ்வளவு உத்வேகமான ஆளாக இருந்தாலும், எதிர்மறை எண்ணங்கள் அவர்களை புரட்டிப்போட்டுவிடும். எதிர்மறை எண்ணங்கள் நம் மனதிற்குள் ஒரு பயத்தைக்கூட்டும் திரைப்படம் போல ஓடிக்கொண்டிருக்கும். அதை நிறுத்துவது மிகவும் கடினம் போல நமக்கு தோன்றும். அவை நமக்கு விரைவில் கொடுப்பது வலியும் வேதனையும்தான். இதை நான் பலமுறை அனுபவித்திருக்கிறேன்.

எதிர்மறை எண்ணங்கள் நம்மை இந்த நொடியில் ஒட்டாமல் செய்துவிடும். அவற்றை நாம் நிறுத்தாவிடில் அவை மிகவும் வலிமை கொண்டதாக மாறிவிடும். அதன் சக்தியை இப்படியும் சொல்லலாம்.. ஒரு மேடான பகுதியிலிருந்து உருண்டோடி வருகின்ற பந்து உருள உருள பெரிதாகிக்கொண்டே வருவதைப்போன்றது.

நேர்மறை எண்ணங்களுக்கும் அதேபோன்ற சக்தி உண்டு.

எதிர்மறை எண்ணங்கள் பொங்கி வழியும்போது அதைப்போக்க 10 விஷயங்களை இங்கே பட்டியலிட்டிருக்கிறேன்.

**1. தியானம்**

தியானமோ யோகாவோ எதுவாக இருந்தாலும் சரி அது இறைநம்பிக்கை கொண்டதாகவோ அல்லது சாதரணமானதாகவோ இருக்கலாம். ஆனால் என்ன நடக்கும் என்ற பயத்தை போக்கி உங்கள் வாழ்வின் இந்த நிமிடத்தில் உங்களை வாழவைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**2. புன்னகை**

கடினமான நொடிகளில் சிரிப்பது மிகவும் கடினமாக தோன்றும். ஒரு கண்ணாடியின் முன்பு உங்களை நிறுத்திக்கொள்ளுங்கள். உங்கள் முகத்தை பாருங்கள். கொஞ்சம் கொஞ்சமாக புன்னகையை வரவழையுங்கள். முடிந்தால் ஏதாவது காமெடி சேனல் போட்டு பாருங்கள். சிறிது நேரத்தில் உங்கள் இறுக்கம் குறைந்து தசைநார்கள் இலகுவாகிவிடும். சிரிப்பைவிட சிறந்த மருந்து உலகில் ஏதும் இருக்க வாய்ப்பில்லை.



### 3. நண்பர்கள்

முடிந்தவரை நேர்மறையாக பேசும் நண்பர்கள் சூழ இருங்கள். உங்களை அறியாமலே அவர்கள் உங்கள் கவனத்தை மாற்றுவார்கள்.



### 4. எண்ணங்களை நேர்மறைக்கு மாற்றுதல்

சிரமங்களை பற்றியும் கஷ்டங்களை பற்றியும் நினைப்பதை கொஞ்சம் மாற்றி, சவால் இருந்தாலும் சமாளிக்கலாம் என்று நினைத்துப்பாருங்கள்.

### 5. குறைகூறாதீர்கள்



உங்களைப் பற்றியோ மற்றவர்களை பற்றியோ குறைகூறுவதை முதலில் நிறுத்துங்கள். அது எந்தவிதத்திலும் உங்களுக்கு உதவப்போவதில்லை. அப்படியே ஏதேனும் தவறு நடந்திருந்தால் அதை சரிசெய்ய உங்கள் பங்கு என்ன என்பதை நினைத்துப்பாருங்கள். நல்லதே நடக்கும்.

### 6. உதவுங்கள்

எதிர்மறை எண்ணங்களின் கவனத்தை திசைதிருப்ப இதைவிட சரியான வழி இருப்பதாய் தோன்றவில்லை அடுத்தவருக்கு ஏதாவது ஒரு உதவி (அது சிறியதோ அல்லது பெரியதோ) செய்யும்போது உங்கள் மனதில் தானாகவே நேர்மறை எண்ணங்கள் முளைவிட துவங்கும்.

### 7. எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது

தவறுகள் அற்ற மிகவும் சரியான மனிதன் யாரும் கிடையாது. நடந்தது நல்லதற்கே என்று நினைத்து சம்பவங்களை நேர்மறையாக எதிர்கொள்ளும்போது, அதற்கு நிச்சயம் பலன் கிடைக்கும்.

### 8. பாடுங்கள்

உங்களுக்கு தெரிந்த ஏதாவது பாடலை முனுமுனுக்க துவங்குங்கள் அது உங்கள் மனதின் சுமையை குறைத்து லேசாக்கும்.

### 9. நன்றி கூறுங்கள்

நன்றி கூறுவதைவிட சிறந்த நேர்மறை உணர்வு இருக்கமுடியாது. ஏற்கெனவே நீங்கள் பெற்றிருக்கும் அனைத்திற்கும் நன்றி கூறுங்கள். அது மேலும் நல்ல சம்பவங்களையும் இன்னும் அதிக நேர்மறை எண்ணங்களையும் உங்களிடம் இழுத்து வரும்.

### 10. நல்லதை படியுங்கள்

தினமும் காலையில் செய்தித்தாள் படிப்பவரா நீங்கள்? முடிந்தவரை அதில் உள்ள எதிர்மறை செய்திகளை படிக்காதீர்கள். அது மேலும் எதிர்மறை எண்ணங்களை உங்களிடம் தூண்டிவிடும். தூண்டப்பட்ட எதிர்மறை எண்ணங்கள் உங்களிடம் அதேபோன்ற கெட்ட சம்பவங்களை உங்களிடம் இழுத்துவரும். ஏனென்றால் நீங்கள் அதில் உங்கள் கவனத்தை செலுத்தினீர்கள் அல்லவா..? முடிந்தவரை நல்ல செய்திகளையும் நல்ல வாசகங்களையும் படியுங்கள். அது எப்போதுமே உங்களுக்கு நல்லது.

- ❖ எங்கேயோ படித்தது நினைவுக்கு வருகிறது.....
- ❖ உங்கள் எண்ணங்களை கவனியுங்கள்.....,

  அது சொல்லாக மாறக் கூடும்.
- ❖ உங்கள் சொற்களை கவனியுங்கள்.....,

  அது செயலாக மாறக் கூடும்.
- ❖ உங்கள் செயல்களை கவனியுங்கள்.....,

  அது பழக்கமாக மாறக் கூடும்.
- ❖ உங்கள் பழக்கங்களை கவனியுங்கள்.....,

  அது குணமாக மாறக் கூடும்.



❖ உங்கள் குணத்தை கவனியுங்கள்.....,

அது தலை விதியை மாற்றக் கூடும்.

**- நாராயணசாமி**



# கார்த்தி in சர்தார்

சர்தார் ஒரு ஸ்பை த்ரில்லர். கார்த்தி இதில் இரு வேடங்களில் நடிக்கிறார். ராஷி கண்ணா, ரஜிஷா விஜயன் நாயகிகளாக நடிக்கின்றனர். இவர்களுடன் சிம்ரன், முனிஷ்காந்த், இந்தி நடிகர் சங்கி பாண்டே, முரளி சர்மா, இளவரசு ஆகியோரும் நடிக்கின்றனர். இரும்புத்திரை, ஹீரோ படங்களை இயக்கிய பி.எஸ்.மித்ரன் படத்தை இயக்குகிறார். யுவன் இசையமைப்பதாகச் சொல்லப்பட்டு தற்போது அந்தப் பொறுப்பை ஜீ.வி.பிரகாஷிடம் ஒப்படைத்துள்ளனர். ஜார்ஜ் சி.வில்லியம்ஸ் ஒளிப்பதிவு செய்கிறார். பிரின்ஸ் பிக்சர்ஸ் படத்தை தயாரிக்கிறது.

2020 பிப்ரவரி 14ல் சர்தார் படத்துக்கு பூஜை போடப்பட்டது. ஆனால், படப்பிடிப்பு தொடங்கியது 2021 ஏப்ரல் 26. கோவிட் உச்சத்தில் இருந்ததால் இரண்டு நாள் படப்பிடிப்புடன் படம் பேக்கப்பானது. படத்துக்காகப் போட்ட அரங்கு வீணானது தான் மிச்சம். சர்தார் அறிவிக்கப்பட்ட பிறகு கார்த்தி பொன்னியின் செல்வனில் நடித்தார்.

தனது அண்ணன் சூர்யா தயாரித்த விருமனில் நடிக்கச் சென்றார் கார்த்தி. இப்போது விருமனும் முடிந்த நிலையில் ஜனவரி 6ஆம் தேதி முதல் சர்தார் படப்பிடிப்பை தொடங்க உள்ளனர். சென்னையில் இந்தப் படப்பிடிப்பு நடக்கிறது.

மித்ரா டாக்கீஸ்

# வாத்தி தனுஷ் coming

நடிகர் தனுஷ் ஏற்கனவே பாலிவுட், ஹாலிவுட் வரை சென்று கலக்கியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிலையில் முதல் முறையாக தெலுங்கு சினிமாவிலும் கால்பதித்துள்ளார். சமீபத்தில் தனுஷ் நடிப்பில் ஹிந்தியில் வெளியான அட்ராங்கி ரே ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

இந்நிலையில், அப்படத்தின் படப்பிடிப்பு இன்று பூஜையுடன் தொடங்கி உள்ளது. தொடர்ந்து ஜனவரி 5 ஆம் தேதி முதல் வழக்கமான படப்பிடிப்பு நடைபெறும் என அறிவித்துள்ளனர். இப்படத்தில் தனுஷுக்கு ஜோடியாக சம்யுக்தா மேனன் நடிக்க உள்ளார். இப்படம் தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய 3 மொழிகளில் தயாராகிறது.



# சர்க்கரை தூக்கலாய் ஒரு புன்னகை - படம் எப்படி?



இந்த படத்தில் புதுமுகம் ருத்ரா கதாநாயகனாக நடித்து இருக்கிறார். இவருக்கு ஜோடியாக சுபிக்சா நடித்துள்ளார். கதை, திரைக்கதை, வசனம் எழுதி மகேஷ் பத்மநாபன் டைரக்டு செய்திருக்கிறார்.

இந்நிலையில் இப்படம் வெளியீட்டுக்கு முன்பே 'செவன் கலர்ஸ் இன்டர்நேஷனல் ஃபிலிம் ஃபெஸ்டிவல்' , 'சில்வர் ஸ்கிரீன் இன்டர்நேஷனல் ஃபிலிம் ஃபெஸ்டிவல்' , இண்டியன் மீராக்கி அவார்டு 2021, ஆர்ஜஃப்ஃப் உள்ளிட்ட திரைப்பட விழாக்களில் கலந்து கொண்டு 10 விருதுகளை வென்றுள்ளது. இதில் சிறந்த நடிகருக்கான 5 விருதுகள் படத்தின் நாயகன் ருத்ராவுக்கு வழங்கப்பட்டுள்ளது.



பாட்டி, அப்பா, அத்தையுடன் வசிக்கும் ருத்ராவை, சென்னையில் ரேடியோ ஜாக்கியாக இருக்கும் சுபிக்ஷா ஒலிகள் சம்பந்தமாக டாகுமெண்டரிக்காக சந்திக்கிறார். ருத்ராவுடன் சேர்ந்து சுபிக்ஷா சிறப்பாக ஒலிப்பதிவு செய்து வேலையை முடித்து விட்டு சென்னைக்கு கிளம்புகிறார். அதன் பின் அந்த டாகுமெண்டரிக்காக சுபிக்ஷாவிற்கு பரிசு கிடைக்க, பிபிசியில் ஆடியோ டாகுமெண்டரி செய்ய அழைப்பு வர, அதில் பெரிய அளவில் முன்னேற ருத்ராவை சென்னைக்கு அழைத்து வந்து தன்னுடன் தங்க வைத்துக் கொள்கிறார். இருவரும் காதலர்களாக வலம் வந்தாலும் சுபிக்ஷா தன்னுடைய வேலையில் மட்டும் கவனமாக இருப்பதையும் தான் ஆரம்பித்த பணிகளை முடிக்க என்ன வேண்டுமானாலும் செய்யக்கூடியவர் என்பதை அறிந்து கொள்கிறார் ருத்ரா. சுபிக்ஷாவின் நடவடிக்கைகள் பிடிக்காவிட்டாலும் ருத்ரா சுபிக்ஷா மீது இருக்கும் காதலால் வேண்டா வெறுப்பாக தங்குகிறார். இதனிடையே சுபிக்ஷாவின் கணவர் என்று சொல்லிக்கொண்டு அமெரிக்காவிலிருந்து ஒருவர் வர, ருத்ரா வேறு வழியின்றி சென்னையிலிருந்து சொந்த ஊருக்கு வந்து விடுகிறார். ருத்ராவை தேடி சுயநலத்திற்காக சுபிக்ஷா மீண்டும் ஊருக்கு வந்து ருத்ராவை அழைக்கிறார். இறுதியில் ருத்ரா என்ன முடிவு எடுத்தார்? சுபிக்ஷா விரித்த வலையில் வீழ்ந்தாரா? சுபிக்ஷாவுடன் சென்றாரா? இல்லை அவரை விட்டு விலகினாரா?

இதையெல்லாம் நீங்க நேரா தியேட்டர்ல பாத்து தெரிஞ்சுக்கங்க













23.12.2021அன்று, இயக்குநர் சிகரம் அவர்களின் 7 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, கே.பாலசந்தர் ரசிகர்கள் சங்கம் சார்பாக,”தலைவர் நடிகர்,கலைமாமணி திரு.ராஜேஷ் அவர்களின் வழிகாட்டுதலின் படி,திருமதி.புஷ்பா கந்தசாமி அவர்களின் மேற்பார்வையில் சென்னையில் சில இடங்களில் சாலை ஓர பொதுமக்களுக்கு 500நபர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. அன்னதான நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டு வழங்கியவர்கள், பிரபலமான நடிகை குமாரி சச்சு,நாடக கதை ஆசிரியர்,நடிகர், காத்தாடி ராமமூர்த்தி, நடிகை அஞ்சு, நடிகர்கள் மாஸ்டர் பிரபாகர்,சந்திரகாந்த்,பூவிலங்கு மோகன், நடன ஆசிரியர் திருமதி.கிரிஜா ரகுராம்,குமார்(செலக்ட் அன்கோ),இணை இயக்குனர் காட்பாடி சிவக்குமார்,சின்னத்திரை இயக்குநர், ஸ்டாலின், ஒளிப்பதிவாளர் விக்ரமன்,”தமிழ்நாடு திரைப்பட சிறு முதலீட்டு தயாரிப்பாளர்கள் சங்க தலைவர், ஆர்.கே.அன்புசெல்வன்,ஆகியோர் அன்னதான நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டார்கள்.இவை அனைத்தையும் முன் நின்று நடத்திய *கே.பாலசந்தர் ரசிகர்கள் சங்க நிர்வாகிகளான, கலைமாமணி,நடிகர், ஞிகூஷீ.பூவிலங்கு மோகன், கவிதாலயா பி.பழனிசாமி, வி.முகமது இலியாஸ், எஸ்.மணிகண்டன்(ஜிகூஷிஷி),பொதுச் செயலாளர் கவிதாலயா வீ.பாபு, ஆகியோர் இணைந்து சிறப்பாக நடத்தினர்.

நிகழ்ச்சியின் நிறைவில் பேசிய நிர்வாகிகள் தமிழக அரசுக்கு சில கோரிக்கைகள் வைத்தனர்.

இயக்குனர் சிகரத்திற்கு சிலை வைக்க அனுமதி வழங்க வேண்டும்.

சிறந்த இயக்குனர்களுக்கு “இயக்குனர் பாலச்சந்தர் விருது” வழங்கவேண்டும்.

இந்த கோரிக்கைகளுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்திக்க நேரம் கேட்டுள்ளோம்“என்று பொதுச்செயலாளர் கவிதாலயா வீ.பாபு தெரிவித்தார்.




"வணக்கம்.இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள் என்று உற்சாகமாக குரல் கொடுத்துக்கொண்டே

உள்ளே வந்தார் கபாலிகான். அட்டைப்பெட்டியில் இருந்து கொடுத்த கேக்கை சுவைத்தவர் "மொத்தமும் குடுங்க" என்று வாங்கிக்கொண்டார்.

"ரொம்ப குஷியா இருக்கீங்க"

ஆமாம்..அரசியல்ல சில கட்சித்தலைவருங்களும் குஷியா இருக்காங்க என்றார்.


**அப்படியா யாரு சொல்லுங்க?**

தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தான்!

மகிழ்ச்சியா இருக்கார்! எப்படி சொல்றீங்க? அவர்தான் இப்போ ஒரே நேரத்துல ஆளுங்கட்சியாகவும், எதிர்கட்சியாகவும் சக்க போடு போடு ராஜா ன்னு இருக்கிறாரு?

**ஒஹோ?**

மத்திய அரசை ஆளும் பா.ஜ.க.வின் தமிழ்நாட்டின் தலைவர்.எனவே ஆளுங்கட்சிக் காரர்.




**தமிழ்நாட்டில் எதிர்கட்சித்தலைவர் எடப்பாடி தானே?**

சட்டசபையில எடப்பாடி எதிர்க்கட்சித் தலைவர். ஆனா மீடியாவுல அண்ணன் அண்ணாமலை தான் எதிர்க்கட்சித் தலைவர்.

எப்படி சொல்றீங்க; அவர் பா.ஜ.க.தலைவராக பதவியேற்றபோது சொன்னதை மறந்துட்டீங்களா?

**என்ன சொன்னார்.**

அடுத்த வருஷம் மீடியா மொத்தம் நம்ம கையில தான் இருக்கும் ன்னாரே? அட ஆமா சொன்னாரு.

**இப்போ மைக் முன்னாடி அடிக்கடி பேட்டி கொடுக்கும் தமிழக அரசியல் தலைவர் அவர்தானே?**

புள்ளி விவரங்களோடு அது சரியோ தவறோ வீடியோக்களை மடக்கி பேசுகின்ற தலைவராக அண்ணாமலை மாறி இருக்கிறார் என்பது உண்மை காவல் உயரதிகாரியாக இருந்தவர் மீடியாக்களிடம் பேசும்போது கண்டிப்போடும் பணிவோடும் கனிவோடும் பேசுவது எளிதாக உள்ளது.



**அப்ப அ.தி.மு.க கட்சி சரியா செயல்படவில்லை யா?**

அங்கே ஓபிஎஸ் இபிஎஸ் அறிக்கை விடுகிறார்கள் மீடியாக்களை சந்திப்பதில்லை. ஆனால் அங்கேயும் ஜெயக்குமார், சி.வி. சண்முகம் போன்றவர்கள் போன்றவை வெளுத்து வாங்குகிறார்கள்!

**குற்றச்சாட்டு எதுவும் திமுக மீது பெரிதாக வைக்கவில்லையே?**

முன்னாள் அமைச்சர்கள் மீது எப்பொழுதெல்லாம் ரெய்டு நடவடிக்கை நடக்கிறதோ அப்போதெல்லாம் ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் கூட்டத்தைக் கூட்டி மைக் முன்பாக அரசின் நடவடிக்கை பழிவாங்கும் நடவடிக்கை என்று சொல்லிவிட்டு போவது மட்டும் தான் அண்ணா திமுக வின் வேலையாக இருந்து வருகிறது.

**அப்ப திமுக ஆட்சிமீது குறையே இல்லை என்கிறீர்களா?**

சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டுகள் தான் பொதுமக்கள் மத்தியில் நிலவுகிறது குறிப்பாக நகை கடன் தள்ளுபடி என்ற விஷயம் அடிமட்ட மக்கள் மீது எளிமையாக தங்களுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தி விட்டது என்ற எண்ணத்தை உருவாக்கிவிட்டது.



**ஏதாவது பாதிப்பு இருக்குமா?**

வருகிற நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் இதற்கான பாதிப்பு நிச்சயம் இருக்கும் என்று அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கிறார்கள்.

பார்ப்போம் முதல்வர் என்ன செய்யப் போகிறார் என்று சொல்லிக்கொண்டு வெளியேறினார் கபாலி கான்.

## நாடு எங்கே போய் கொண்டிருக்கிறது? தொடர் - 2

# நீங்களும் யோசிங்க!

துடுப்பதி ரகுநாதன்



நம் பற்றாக்குறைப் பட்ஜெட்டுக்கு இதுவும் ஒரு காரணமாக இருக்குமோ?

நம்மை அறியாமல் நாம் மாறிக் கொண்டே இருக்கிறோம்! நம்மை மாற்றிக் கொண்டு இருப்பது எது? அது சரியாகப் புரியவில்லை! யோசிக்க வேண்டியிருக்கிறது!

ஒரு வாரமாக என் மனைவி வீடு பெருக்க புது விளக்குமாறு வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள்!. எங்கள் வீட்டிலிருந்து சில மைல் தூரம் தொலைவில் உள்ள பெரிய சூபர் மார்க்கெட்டிற்கு டூ வீலரில் மனைவியை பின்னால் உட்கார வைத்துக் கூட்டிக் கொண்டு போய், ஒரு உயர்தர விளக்குமாறு 150 ரூபாய்க்கு வாங்கிக் கொடுத்து கூட்டி வந்தேன்.

இப்பொழுது கோவை திருச்சி ரோட்டில் பிரமாண்டமான மேம்பாலம் கட்டும் பணி நடந்து கொண்டிருக்கிறது! திரும்பிய பக்கம் எல்லாம் புல்டோஷர், ஜே.சி.பி வாகனங்கள் வாயை பிளந்து கொண்டு வேலை செய்து கொண்டிருந்தன. ரோட்டை பாதியாக தடுத்து குறுகலாக்கி விட்டார்கள்! அந்த குறுகல் ரோட்டிலும் டவுன் பஸ், லாரி, வேன். டூ வீலர் எல்லாம் வேகத்தை குறைக்காமல் தான் போய் கொண்டிருந்தன. நான் உயிரை பிடித்துக் கொண்டு போய் ஜாக்கிரதையாக நல்ல பொருள் சற்று குறைவான விலையில் சூபர் மார்க்கெட்டில் வாங்கிய திருப்தியில் வந்தேன்!

நகரில் பல ஆயிரம் கோடிகளில் கட்டிய பிரமாண்டமான ஷாப்பிங் மால்கள் நிறைய வந்து விட்டன! இப்பொழுது வீட்டிற்கு அத்தியாவசியமான சாமான்கள் வாங்குவது கூட இளைய தலைமுறைக்கு ஒரு பொழுது போக்காக மாறி விட்டது! என் பெண்கள் கூட நானும் அங்கு போய் பொருட்கள் வாங்கப் பழகி விட்டேன்!



என்னை மட்டுமல்ல இப்பொழுது எல்லோரையும் தான் யாரோ அல்லது எதுவோ மாற்றிக் கொண்டு இருக்கும் போல் தான் இருக்கிறது! கோவையில் எல்லா மால்களிலும் எப்பொழுதும் கூட்டம் நிரம்பி வழிகிறது!

டூவிலரில் என் வீட்டிற்கு பக்கத்தில் வரும் பொழுது தான் என் மனைவி வீட்டில் உளுந்தம் பருப்பு இல்லை ஒரு கிலோ வாங்கிக் கொடுங்க!...” என்று கேட்டார்கள்!

அதனால் எங்க வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த நாடார் கடையில் வண்டியை நிறுத்தி உளுந்தம் பருப்பு கேட்டேன்.

அந்த நாடார் கடையில் நான் இருபது வருடங்களாக மளிகைச் சாமான்கள் வாங்கி வந்திருக்கிறேன். இளைய தலைமுறைகள் தலையெடுத்த பின், அவர்களுக்கு மால்களில் வரிசையாக கூடைகளில் வேண்டிய சாமான்களை எடுத்துப் போட்டுக் கொண்டே போவது தான் பிடிக்கிறது! விலைகளைப் பார்ப்பது ஒரு பட்டிக்காட்டுத்தனமாகப் படுகிறது! நாடார் கடைகளில் நாம் விலை கேட்டுப் பொருட்கள் வாங்குவதும், அவர் பொட்டலம் கட்டி நூல் சுற்றுவது எல்லாம் அவர்களுக்குப் அநாகரிகமாகப் போய் விட்டது! நாடார் உளுந்தம் பருப்பை கட்டிக் கொண்டிருந்தார் அந்த கடையில் ஒரு மூலையில் விளக்குமாறுகளை சாய்த்து வைத்திருந்தார்கள். அதில் நான் வாங்கி வந்த விளக்குமாறும் அதே கம்பெனி காகிதத்தோடு இருந்தது.

அதை எடுத்துப் பார்த்து விட்டு நாடாரிடம் விலை கேட்டேன். “சார்..அது உயர் தர கம்பெனி விளக்கமாறு...110 ரூபாய் ஆகிறது” என்றார்! நான் டூ வீலரில் பல சிரமங்கள் பட்டு, நகருக்கு மத்தியில் இருந்த அந்தப் பிரமாண்டமான மாலுக்குப் போய் அதையே 150 ரூபாய் கொடுத்து சுமந்து வந்தேன். அதே விளக்குமாறு வீட்டிற்கு எதிரே இருக்கும் நாடாரின் சின்னக்கடையில் நாற்பது ரூபாய் குறைந்த விலையில் கிடைக்கிறது!

எந்த நேரமும் செல்போனை நோண்டி வெட்டியாக பொழுது போக்கும் நாம், நம் பொருளாதாரத்தைப் பாதிக்கும் வீட்டிற்கு தேவையான அத்தியாவசிப் பொருட்களை வாங்குவதையும் இன்று ஒரு பொழுது போக்காக நினைத்து நாம் மால்களுக்கு ஓடிக் கொண்டிருப்பது கூட, நம் பற்றாக்குறை பட்ஜெட்டிற்குக்கு ஒரு காரணமாக இருக்கலாம்!.. நான் யோசிக்கத் தொடங்கினேன்.

# கொழுப்பைத் தடுக்கும் பூண்டுக்கஞ்சி!

உடலின் கொழுப்பை விரைவில் குறைக்க பூண்டு கஞ்சி.

நலமாக வாழ இயற்கையாக கிடைக்கும் காய் கறிகளையும் பழங்களையும் உண்டு வாழ்ந்தாலே போதும். ஆனால் நடைமுறை வாழ்வில் தற்போது அனுபவித்து வரும் செயற்கையான வாழ்க்கையால் அவதிபடுவதுதான் மிச்சம்.

உடல் எடையை குறைப்பதில் நாம் தினமும் வீட்டில் பயன்படுத்தப்படும் பூண்டு எந்த அளவிற்கு உதவி செய்கிறது தெரியுமா ?

இந்த கீழ்வரும் செய்முறையின் அடிப்படையில் பூண்டில் கஞ்சி செய்து தினமும் குடித்துவர, உடல் எடை மிக வேகமாகக் குறைய ஆரம்பிக்கும்



**பூண்டு கஞ்சி தயார் செய்யும் முறை:**

தேவையான பொருள்கள்: பூண்டு – 15 பல் (தோல் நீக்கப்பட்டது), புழுங்கல் அரிசி– ஒரு கப் (வறுத்து, உடைத்தது), சீரகம், மிளகு – தலா கால் டீஸ்பூன் (உடைத்தது), வெந்தயக்கீரை – ஒரு கைப்பிடி அளவு, இந்துப்பு – தேவையான அளவு, மோர் – ஒரு கப், தண்ணீர் – 4 கப்

**செய்முறை:** உடைத்த புழுங்கல் அரிசி, பூண்டு, மிளகு, சீரகம், இந்துப்பு, வெந்தயக்கீரை, தண்ணீர் ஆகியவற்றை குக்கரில் சேர்த்து, மூடி 3 விசில்விட்டு இறக்கவும். ஆறியதும் நன்கு மசித்து, மோர் சேர்த்து குடிக்கலாம். காலை, மாலை வேளைகளிலும் இதை சாப்பிடலாம்.

இதனை மதிய உணவில் நாம் இயல்பாகவே அதிக கலோரிகளை எடுத்துக் கொள்வோம். அதற்கு பதிலாக இந்த கஞ்சியைக் குடித்து வந்தால் பசியும் அடங்கும். குறைந்த கலோரியில் நிறைவான, சத்தான உணவைச் சாப்பிடவும் முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. நம் உடலில் அதிகரித்துள்ள கொழுப்பை ,அதிக அளவில் மெடபாலிசம் செய்து வெகுவாக குறைகிறது. அதுமட்டுமில்லாமல், ரத்த ஓட்டத்தையும் அதிகரிக்க செய்கிறது. புற்று நோய் வருவதை தடுகிறது. இது போன்ற பல நன்மைகள் இருக்கின்றது.


## மித்ரா டைம்ஸ் உங்கள் இல்லம் தேடி வரவேண்டுமா?

ஆறாம் ஆண்டின் துவக்கத்தில் அடியெடுத்து வைக்கும் மித்ரா டைம்ஸ் இலட்சக்கணக்கான வாசகர்களோடு பயணிக்கிறது. இதழ்களில் இடம் பெறும் செய்திகள், கட்டுரைகள் பயனுள்ளதாகவும் தங்களின் முன்னேற்றத்திற்கு உதவியாய் இருப்பதாகவும் மகிழ்ச்சியோடு பகிர்ந்து கொள்கிறார்கள்.

தாங்கள் அறியாத செய்திகள், புதிய தகவல்களையும் மித்ரா டைம்ஸ் எங்களுக்கு வழங்குகிறது என்பது வாசகர்களின் கருத்து.

மித்ரா டைம்ஸ் சந்தாதாரராக தாங்கள் இதுவரை ஆகவில்லையென்றால் உடனே செலுத்துங்கள்.

**ஆயுள்சந்தா : ரூ.2400.00**

**ஆறாண்டு சந்தா : ரூ.1440.00**

**ஆண்டு சந்தா : ரூ.240.00**

மேலும் விபரங்களுக்கு: **044-23743007/8**

தொகை செலுத்த வேண்டிய விபரம்:

| | | |
|---|---|---|
| Name | : | MITRA TIMES |
| A/C no | : | 50200012576292 |
| Bank | : | HDFC Bank |
| Branch | : | T.Nagar |
| IFSC | : | HDFC0000206 |



# வாயுத்தொல்லை நீக்கும் வழிமுறைகள்!

நெஞ்சு எரிச்சல்.. ஏதோ குத்துவது போன்ற உணர்வு ஆசன வாயில் அடிக்கடி வாயு வெளியேறுவது மாரடைத்தது போன்ற உணர்வு. எதையாவது சாப்பிட்டால் அப்படியே எரிச்சல் உண்டாகுவது. வயிற்றில் கட கடவென சத்தம் வருவது, லேசாக



தலை சுற்றுவது சிலருக்கு இருக்கலாம். இப்படி பல அறிகுறிகளும் அசௌகரியமும் தாய்மார்களுக்கோ, கர்ப்பிணிகளுக்கோ, வீட்டு பெரியவர்களுக்கோ இருக்கும். இந்த வாயு தொல்லையை எப்படி விரட்டி அடிப்பது. 3 வயது குழந்தைகள் தொடர்ந்து ஏப்பம் விட்டுக்கொண்டே இருப்பார்கள். வாயு தொல்லையால் சில குழந்தைகளும் வயிறு வலிக்கிறது என அழுவார்கள்.

**வாயு பிரச்னையை விரட்ட என்ன செய்யலாம்?**

காலை மற்றும் மதிய உணவு, சமைத்த உணவுகளாக இருக்க வேண்டும். இரவு உணவு சமைக்காத பழ உணவுகளாக இருக்கலாம். காலை 11, மாலை 4 போன்ற சமயங்களில் பழ உணவுகளை சாப்பிட்டு பாருங்கள் வாயு தொல்லை உங்களிடம் நெருங்காது. காலை உணவில் தேங்காய்ப் பால் கலந்த உணவுகள் இருப்பது மிக மிக நல்லது. வாயுவை விரட்டிவிடும்.





இரவெல்லாம் தூங்கி காலை எழுந்து, உணவு சாப்பிடுகையில் உண்ணும் உணவு குளிர்ச்சியாக உணவாக இருப்பது அவசியம். அவல், தேங்காய்ப் பால், கைக்குத்தல் அரிசி, சிறுதானிய பொங்கல், வெண் பொங்கல் சாம்பார், இட்லி சாம்பார், நவதானிய கஞ்சி போன்ற ஆரோக்கியமான உணவுகளை சாப்பிடலாம். குழந்தைகள், வளரும் குழந்தைகளுக்கு இட்லி, ஸ்டீம் தோசை, ஆப்பம் தேங்காய்ப்பால், புட்டு கொண்டைக்கடலை, வாழைப்பழம், வெல்லம் இப்படி கொடுக்கலாம். பெரியவர்கள் பொங்கல், சப்பாத்தி பருப்பு சப்ஜி, ஒரு கப் பழத்துண்டுகள், கேழ்வரகு உணவுகள், சிவப்பரிசி அவல், பப்பாளி சாலட் போன்ற 23 விதமான உணவுகளை



சாப்பிட வேண்டும். ஆம், காலை உணவு ஒரு ராஜாவை போல சாப்பிடுங்கள். அதுதான் ஆரோக்கியம்.என்னென்ன விதிமுறைகள்?

அதிக பசி வந்த பின்னும் சாப்பிடாமல் இருக்க கூடாது. காலை உணவு 9 மணிக்குள் சாப்பிட்டு விடுவது மிக மிக முக்கியம். மிளகாய்க்குபதிலாகமிளகுதூள் எங்கெல்லாம் பயன்படுத்த முடியுமோ அங்கெல்லாம் பயன்படுத்துங்கள். எண்ணெயில் பொரித்த உணவுகளைத் தவிர்த்துவிடுங்கள். அதிக காரம் உடலுக்கு நல்லதல்ல. சிலர் சொல்வார்கள் இதெல்லாம் ஒரு காரமா, நான் எவ்ளோ காரம் சாப்பிடுவேன் தெரியுமா? இது பெருமை அல்லஞ் உங்களது குடல் பாதித்துகொண்டிருக்கிறது எனத் தெரியாமல், நீங்கள் சொல்வது அறியாமையின் வெளிப்பஅடு. வேலை காரணமாகவோ மற்ற காரணத்துக்காகவோ காலை, மதியம், இரவு உணவைத் தவிர்க்க வேண்டாம். அடிக்கடி தலைவலி, வயிறு வலி, சளி என நீங்களே அடிக்கடி மருந்து சாப்பிடுவதை நிறுத்திக் கொள்ளுங்கள். புகை பிடிக்கும் நபர்கள் அருகில் செல்ல கூடாது. எப்போதும் டென்ஷன், படபடப்பு, பயம், அவசரம் போன்றவை இருந்துகொண்டே இருந்தால் நிச்சயம் செரிமான பிரச்னை வரும். வாயு பிரச்னையும் வரும். மனதை எப்போது அமைதியாக, சீராக வைத்திருக்கப் பழகுங்கள்.

**– ஆர்.குணசேகரன்**

# பிறருக்கு உதவினால் நமக்கு மகிழ்ச்சி வரும்!



"பிறரை மகிழ வைத்து மகிழுங்கள்...!"

வாழ்க்கை பற்றிய புதிர்கள் ஏராளம் உள்ளன. அதில் ஒன்று மகிழ்ச்சியைத் தேடி மனிதனின் நீண்ட போராட்டம்...

ஏழை, பணக்காரன், அதிகாரம் படைத்தவர், பாமரன்,அறிவாளி என எத்தனை விதமானவர்களை அழைத்து வந்தாலும், அவர்களுக்குள் எவ்வளவு வேறுபாடுகள் இருப்பினும், மகிழ்ச்சியை அவர்கள் தேடி அலைவது மட்டும் ஒரே பொதுக்காரணியாக இருந்து வருகிறது...

வாழ்க்கையின் அழகு என்பது நீங்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்பதில் இல்லை. உங்களால் அடுத்தவர் எவ்வளவு மகிழ்ச்சி அடைந்தார்கள் என்பதிலேதான் இருக்கிறது...

மகிழ்ச்சி என்பது போய் சேரும் இடம் அல்ல. அது ஒரு பயணம்...

மகிழ்ச்சி என்பது எதிர்காலம் இல்லை. அது நிகழ்காலம்...

மகிழ்ச்சி என்பது ஏற்றுக் கொள்வது அல்ல. அது ஒரு முடிவு...

ஒரு அழகான பெரிய பணக்காரி அதிக மதிப்புள்ள உடை உடுத்தி ஆடம்பரத்தில் வாழும் ஒரு பெண். ஒரு மனநல மருத்துவரிடம் சென்றாள்...

அவரிடம் "என் வாழ்வு ஒரே வெற்றிடமாக இருக்கிறது. எவ்வளவு இருந்தும் வெற்றிடமாகவே உணருகின்றேன்...

பொருள், இலக்கு என்றில்லாமல் வாழ்க்கை போய்க் கொண்டு இருக்கிறது. என்னிடம் அளவு கடந்த பணமும், சொத்தும் எல்லாம் இருக்கிறது. இல்லாதது அமைதியும், மகிழ்ச்சியும் மட்டுமே. என் மகிழ்ச்சிக்கு ஏதாவது வழி சொல்லுங்கள் என்றாள்...

"மருத்துவர் அவரின் அலுவலகத்தில் தரையை கூட்டிக் கொண்டிருந்த ஒரு பணிப்பெண்ணை அழைத்தார்...

அந்த பணக்காரப் பெண்ணிடம், "நான் இப்பொழுது பணிப்பெண்ணிடம் எப்படி மகிழ்ச்சியை வரவழைப்பது" என்று சொல்லச் சொல்கிறேன். நீங்கள் குறுக்கே எதுவும் பேசாமல் அவர் பேசுவதை மட்டும் கேளுங்கள் என்றார்...

பணிப்பெண்ணும் துடைப்பத்தை கீழே போட்டு விட்டு ஒரு நாற்காலியில் அமர்ந்து சொல்லத் தொடங்கினாள்...

"என் கணவர் இறந்த மூன்றாவது மாதம், என் ஒரே மகன் விபத்தில் இறந்து போனார். எனக்கு யாரும் இல்லை எதுவும் இல்லை. என்னால் உறங்க இயலவில்லை. உண்ண முடிய வில்லை. யாரிடமும் சிரிக்க முடிய



வில்லை. என் வாழ்க்கையை முடித்துக் கொள்ளலாம் என நினைத்தேன்...

இப்படி இருக்கையில் ஒருநாள் நான் வேலை முடிந்து வரும்போது ஒரு பூனை என்னைப் பின் தொடர்ந்தது...

வெளியே மழை பெய்து கொண்டு இருந்தது.எனக்கு பூனையைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. அதை நான் என் வீட்டில் உள்ளே வரச் செய்தேன்...

நான் அதற்கு குடிக்க கொஞ்சம் பால் கொடுத்தேன். அது அத்தனைப் பாலையும் குடித்து விட்டு என் கால்களை அழகாக வருடிக் கொடுத்தது...

கடந்து போன மூன்று மாதத்தில் நான் முதல் முதலாகப் புன்னகைத்தேன். நான் அப்பொழுது என்னையே கேள்வி கேட்டேன். ஒரு சிறு பூனைக்கு நான் செய்த ஒரு செயல் என்னை மகிழ்ச்சி அடையச் செய்கிறது எனில்!, ஏன் இதைப் பலருக்கு செய்து நான் ஏன் மனநிலையை மாற்றிக்கொள்ளக் கூடாது என ஆலோசித்தேன்...

அடுத்த நாள் நோய் வாய்ப்பட்டிருந்த என் அடுத்த வீட்டு நபருக்கு உண்பதற்கு கஞ்சி கொடுத்தேன். அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அவரை மகிழ வைத்து நான் மகிழ்ந்தேன்...

இப்படி ஒவ்வொரு நாளும் நான் பலருக்கு உதவி, அவர்தம் மகிழ, நானும் பெரு மகிழ்வுற்றேன்...

இன்று என்னை விட மனநிறைவாக உறங்கவும், உணவை உண்ணவும் யாரேனும் இருக்கிறார்களா?..என்பதே அய்யப்பாடுதான்...

மகிழ்ச்சி என்பது, அதை மற்றவர்க்கு கொடுப்பதில்தான் இருக்கிறது என்பதை இந்த செயல்கள் மூலமாக கண்டு கொண்டேன்...!

இதைக் கேட்ட அந்தப் பணக்காரப் பெண் ஓலமிட்டு அழுதாள். அவளிடம் பணத்தைக் கொண்டு வாங்கக் கூடிய எல்லாம் இருந்தது, ஆனால்!, பணத்தால் வாங்க முடியாத மகிழ்ச்சி மட்டும் அவளிடம் இல்லை...

வாழ்க்கையில் எல்லோரும் மகிழ்ச்சியைத் தேடுகிறோம், ஆனால்!, அது எங்கே?,எப்படி?, எதில் கிடைக்கும் என்று நினைப்பது இல்லை'...!

மரங்கள் கனிகளைத் தருவது போல, தங்களிடம் உள்ளதை இல்லாதவர்களுக்கு கொடுத்து மகிழ வேண்டும். 'நம் மகிழ்ச்சி அடுத்தவர்களுக்கு உதவுவதில்தான் இருக்கிறது....!! அடுத்தவர்களுக்கு மகிழ்ச்சி கொடுங்கள், உங்கள் மகிழ்ச்சி உங்களை தேடி வரும்'. "பிறரை மகிழ வைத்து நாம் மகிழ வேண்டும். உலகம் உங்களைக் கண்டு மகிழும்" உங்கள் வாழ்க்கை நிறைவாக இருக்கும்....!!!

**- ஆர்.ஹரிபாபு**

# காலங்கள் தோறும் காட்சிகள் மாறும்!

கலைமாமணி, சொல்லின் செல்வர்,
**ஆவடிக்குமார்** தலைவர், அனைத்திந்திய தமிழ்ச்சங்கம்




*நன்னீரின்*
*ஊற்று பெருக்காய் நலம் வளர்க்கும்...*
*ஆற்றுத் தண்ணீரின்*
*தன்மை கூட...*
*அரவணைக்கும் ஆழியிடம்*
*நிறமிழக்கும்...!*
*நீள கடல் சேர்ந்தவுடன்*
*சுயமிழக்கும்...*
*சுவை தரமிழக்கும்...!*

*கூடுவதால் கூடிவிடும்*
*கடல் நீரை...*
*கதிர் விரித்துக் கவர்ந்து*
*ஆவியாக்கி*
*அழைத்துப் போகும்...!*

*மேகத்தின் தாகத் தழுவலால்...*
*மண் நோக்கித் தாவும் மழை...*
*மறுபடியும் நன்னீராய் தழைக்கும்...!*

*சூரியனைச் சுற்றிச்*
*சுழலும் உலகத்தில்...*
*அச்சுப் பிசங்காமல்*
*அனைத்தும் இயங்கும்...!*

*காலங்கள் தோறும்*
*காட்சிகள் மாறும்...*
*ஞாலம் முழுவதும்*
*கோலம் இதுதான்...!*
*கொள்கை பொதுதான்...!*

*மாறுவதும் மறைவதும்*
*மறுபடி வருவதும்...*
*சேர்வதும் பிரிவதும்*
*சேர்ந்து தெரிவதும்...*
*மாற்றம் ஏற்றமென்று*
*மனிதர் நினைத்து*
*புதுமை புரட்சியென*
*புதுகதை கதைக்கின்றார்...!*

*எதுவும்*
*இல்லாதது இல்லை...!*
*இருந்ததால்*
*மாறியது எல்லை...!*
*மாறாதது இயற்கையின் இயக்கம்...!*
*உணராதது*

## இனியாவது சறுக்காத விதி செய்வோம்!

*புத்தாண்டு நித்தமும் எழ*
*நிகழ்வுகள் நினைவுகளாக*
*சுற்றும் பூமியின் மேனி*
*இரவிலும் பகலிலும் விழ*

*பிறந்தகால இறந்தகால சுழற்சி*
*இரவுக்கும் பகலுக்குமான முடிச்சு*
*ஒன்றை விழுங்கும் மற்றொன்று*
*துன்பம் மாறும் என்பதற்கு சான்று*

*ஆயுள் முடிந்த(து) போன வருடம்*
*அழகாய் பிறந்த புது வருடம்*
*காலக் கருவின் அடுத்த குழந்தை*
*ஊனமின்றி பிறந்தால் போதும்*
*அடுத்து துவங்கும் பூமியின் வட்டம்*

*தலை சுற்றாமல் இருக்கட்டும்*
*படுத்தும் இந்த கிருமியின் ஆட்டம்*
*பாரை விட்டு செல்லட்டும்*

*பூமிக்கு மட்டுமா பிறந்தநாள்*
*உயிர்கள் ஒவ்வொன்றுக்கும்*
*ஒரு வயது கூடும் நாள்*
*ஒன்றில் துவங்கும் பொந்நாள்*

*காலம் என்பது கடவுள் போன்றது*
*நீ எங்கு சென்றாலும் உனைத் தொடர்வது*
*நீ !*
*கோலமிட்டு வரவேற்றாலும்*
*கோஷமிட்டு வரவேற்றாலும்*
*கோபமாக வரவேற்றாலும்*
*புத்தாண்டு வந்தே தீரும்*

*இடிந்த பாதைகளை சரி செய்வோம்*
*இனியாவது சறுக்காத விதி செய்வோம்*
*மடிந்து போகட்டும் கோபமும் பகையும்*
*மலர்ந்திடும் நிச்சயம் அமைதியும் புன்னகையும்!*

**– சுபத்ரா திவாகரன்**





# பெண்ணின் திருமண வயது உயர்வு!

பெண்ணின் திருமண வயதை 18 லிருந்து 21 ஆக உயர்த்திய முடிவில் இருத்தரப்பட்ட கருத்துகளை பார்க்க முடிகிறது....

ஒன்று வரவேற்று மற்றொன்று எதிர்த்து....

வரவேற்பவர்கள் கூறும் காரணம் 21 வயது என்பது பெண்ணின் கல்வி கனவை, பட்ட படிப்பை எதிர்கால தேவையை பூர்த்தி செய்யும் கால அளவாக அந்த மூன்றாண்டு இடைவெளியை அணுகுகிறார்கள்...

அவள் சுதந்திரமானவளாக நல்லது, கெட்டது அறிந்து முடிவெடுக்கும் பக்குவத்தை ஏற்கும் வயது என்று தங்கள் வாதத்தை முன் வைக்கிறார்கள்...

எதிர்ப்பவர்கள்.

இயற்கைக்கு முரணானது.....நடுத்தர ஏழை வீட்டில் பெண்ணை கட்டி கொடுப்பதே மிகப்பெரிய சுமை...அதிலும் பதின் வயதில் காதல் வயப்பட்டு,இல்லையென்றால் முறையற்ற வழி தவறி சென்றால் பாதிக்கப்படுவதும் பெண்களே!.பெண் குழந்தையை 18 வயது வரை பாதுகாப்பதே இந்த சமூகத்தில் பெரும் சவாலாக இருக்கிறது...நடுத்தர குடும்பத்தின் உணர்வுகளை ஏழை தகப்பனின் நிலையில் இருந்து பாருங்கள் என்கிறார்கள்....

இரண்டிலும் நியாயமான ஏற்புடைய கருத்துக்கள் இருக்கின்றது...

அதை தாண்டி இன்று பெரும்பாலான பெண்கள் 21 என்றில்லை அதையும் தாண்டி வேலை,கனவு,உயர் கல்வி என்று காலம் தாழ்த்தியே திருமணம் செய்துக்கொள்கிறார்கள்...

இதில் மருத்துவம் பெண்ணிண் கர்ப்பம் தரிப்பதை 30 வயதை தாண்டாமல் பார்த்துக்கொள்ளுங்கள் என்கிறது...

அதிலும் புற்றீசல் போல கருத்தரிப்பு மையங்கள் முளைக்கிறது என்றால் அதன் காரணம் சொல்லி தெரியவேண்டியதில்லை...

30 வயதிற்கு மேல் குழந்தை பெருவதில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகிறது...


அதிலும் காலம் தாழ்ந்து குழந்தைப்பேறு ஏற்படும் போது பெண்களின் கருவில் உண்டாகும் சிசுவிற்கு இயற்கையிலையே மரபணுவில் கொலஸ்ட்ரால் இரத்த அழுத்தம் சர்க்கரை நோய் இவைகள் உண்டாவதோடு பிறக்கும் குழந்தையும் அதிக பருமனோடு பிறக்கும் சாத்தியக்கூறுகள் அதிகமாக இருப்பதாகவும்,பிசிஓஎஸ் பிரச்சனை அந்த குழந்தைக்கு உண்டாவதற்கு வாய்ப்பு இருப்பதாக மருத்துவர்.கௌரி மீனா(மகப்பேறு மகளிர் நலம் மற்றும் லேப்ராஸ்கோப்பி அறுவை சிகிச்சை நிபுணர்)கூறுகிறார்....

எது எப்படியேனும் இன்றைய உணவுமுறை,வாழ்க்கை முறை இரண்டுமே ஆணின்,பெண்ணின் உடல் சார்ந்த பல்வேறு பிரச்சனைகளையும் குழந்தை பேறு கிடைப்பதில் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்தி இருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை...அதிலும் குறிப்பாக 20 வயதிலையே பெண்களுக்கு சினைநீர்கட்டி பிரச்சனையும் ஆண்களுக்கு கவுண்டிங் பிரச்சனையும் அதிகமாக ஏற்படுகிறது...இதையெல்லாம் யோசித்தாலும்

முடிவாக ஒற்றை பழமொழி தான் நியாபகத்திற்கு வருகிறது... "பருவத்தே பயிர் செய்" அது 18 இல்லை 21னா இல்லை அதற்கும் மேலா என்பதை உங்கள் பார்வைக்கே விட்டு விடுகிறோம்..

**- கவிஞர் சுகந்தீனா**

# பொங்கலோ பொங்கல்!



எஸ்.சூர்யா



**தை** மாதத்தின் முதல் நாளாக பொங்கல் திருநாள் கொண்டாடப்படுகிறது. பொங்கல் திருவிழா நான்கு நாள் கொண்டாட்டப்படுகிறது.

**போகி:** போகி தமிழ் ஆண்டின் மார்கழி மாதத்தின் கடைசி நாளன்று அதாவது பொங்கல் திருநாளின் முதல் நாள் கொண்டாடப்படுகிறது. இந்நாள் 'பழையன கழித்து, புதியன புகவிடும்' நாளாகக் கருதப்படுகிறது. பழையவற்றையும், பயனற்றவையும் விட்டெறியும் நாளாகக் கருதப்படுகிறது.

**தைப்பொங்கல்:** ஆடி மாதத்தில் தேடி விதைத்த பயிர்களின் விளைச்சலை அறுவடை செய்து பயன் அடையும் பருவமே தை மாதம் ஆகும். அந்த அறுவடையில் கிடைத்த நெல்லின் புத்தரிசியைச் சருக்கரை, பால், நெய் சேர்த்துப் புதுப் பானையிலிட்டுப் புத்தடுப்பில் கொதிக்க வைத்துப் பொங்கல் சோறாக்கிச் சூரியனுக்கும் மாட்டுக்கும் படைத்து உண்டு மகிழும் விழாவே பொங்கல் விழாவாகும்



**மாட்டுப் பொங்கல்:** மாட்டுப் பொங்கல் என்பது தைப்பொங்கல் நாளின் மறுநாள் தமிழர்களால் கொண்டாடப்படும் ஒரு பண்டிகை ஆகும். இதை கன்றுப் பொங்கல் எனவும் அழைக்கப்படுகிறது. மக்களின் வாழ்வில் ஒன்றிய பசுவுக்கு நன்றி தெரிவிப்பதற்காகவும், பசுக்களில் எல்லாத் தேவர்களும் இருப்பதாலும் பசுக்களை வணங்கி வழிபடும் நாளாகக் கொண்டாடுகின்றனர். உழவுத் தொழிலுக்கு உறுதுணையாக விளங்கும் ஆவினத்திற்கு நன்றி கூறும் நாளே இந்நாளாகும்.

**காணும் பொங்கல்:** காணும் பொங்கல் என்பது பொங்கல் கொண்டாட்டங்களில் நான்காவது நாள் இடம்பெறும் விழா ஆகும். காணும் பொங்கலைக் கன்னிப் பொங்கல் என்று அழைப்பர். இப்பண்டிகையின் நிகழ்வுகளில் உற்றார், உறவினர், நண்பர்களைக் காணுதல் மற்றும் பெரியோர் ஆசி பெறுதல் என்பன அடங்கும்.

அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துகள். பொங்கலோ பொங்கல்!




# அவல் சர்க்கரைப் பொங்கல்



மித்ரா கிட்சன்

**தேவையான பொருட்கள்:**

*1. வெள்ளை அவல் - 200 கிராம்*

*2. பாசிப்பருப்பு - 100 கிராம்*

*3. வெல்லம் - 400 கிராம்*

*4. நெய் - 200 கிராம்*

*5. முந்திரி - 50 கிராம்*

*6..திராட்சை - 50 கிராம்*

*7. ஏலக்காய் பொடி - சிறிதளவு*

*8. உப்பு - சிறிதளவு*

***செய்முறை:*** *முதலில் ஒரு கிண்ணத்தில் 400 கிராம் வெல்லம் அரை டம்ளர் தண்ணீர் சேர்த்துப் பாகு எடுத்துக் கொள்ளவும். பிறகு ஒரு வாணலியில் சிறிதளவு நெய் சேர்த்து முந்திரி திராட்சையை வறுத்து எடுத்துக் கொள்ளவும். பிறகு சிறிது நெய் சேர்த்து பாசிப்பருப்பை வறுத்துக் கொள்ளவும் .பிறகு அரை டம்ளர் தண்ணீர் சேர்த்துப் பாசிப்பருப்பை ஒரு விசில் வைத்து வேக வைத்துக்கொள்ளவும் பிறகு சிறிது நெய்யில் அவலை லேசாக வறுக்கவும். பிறகு ஒரு டம்ளர் தண்ணீர் சேர்த்து அவலை 5 நிமிடம் வேக வைக்கவும் . பிறகு அதனுடன் வேக வைத்த பாசிப்பருப்பைச் சேர்க்கவும். பிறகு அதில் வெல்லம் பாகு சேர்த்து நன்றாக கலக்கவும். பிறகு இதில் சிறிதளவு உப்பு சிறிதளவு ஏலக்காய் பொடி சேர்க்கவும். பிறகு மீதமுள்ள நெய்யை அதில் ஊற்றி நன்றாக கலக்கவும் பிறகு வறுத்த முந்திரி திராட்சைகளைச் சேர்த்து விடவும் இப்போது சுவையான, சூப்பரான அவல் சர்க்கரைப் பொங்கல் ரெடி.*



S. கவிதா,
சிட்லபாக்கம்




# எம் பதில்கள்



**1.பிரதமர் மோடி சென்னை வருகிறாரே?**

தமிழகத்தில் 11 புதிய மருத்துவ கல்லூரிகளை திறந்து வைக்க ஜனவரி 12 ம் தேதி பிரதமர் நரேந்திர மோடி சென்னை வருகை தர உள்ளதாக தமிழக மக்கள் நல்வாழ்வுத் துறை தகவல் தெரிவித்துள்ளது.

இதன்படி விருதுநகர், ராமநாதபுரம், திண்டுக்கல், நாமக்கல், நீலகிரி, திருப்பூர், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், நாகை, அரியலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களில் புதிய மருத்துவ கல்லூரிகளை பிரதமர் மோடி தொடங்கிவைக்க உள்ளார்.

திறப்பு விழா நிகழ்வில் பிரதமர் மோடியுடன் தமிழக முதல்வர் ஸ்டாலின், தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் மேடையில் இருப்பர். இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்து வருகின்றன.அதிமுக ஆட்சியின் போது தமிழகத்துக்கு பிரதமர் மோடி வரும்போதெல்லாம் 'கோ பேக் மோடி' என்கிற போராட்டத்தை நடத்தியதுடன், அது தொடர்பான ஹேஸ்டேக்கை வைரலாக்கியது திமுக. இது பெரிய அளவில் வைரல் ஆனது.

திமுகவின் போராட்ட அடையாளங்களில் ஒன்றாக இது மாறியது. குறிப்பாக, நீட் தேர்வு உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் தமிழகத்துக்கு பாஜக வஞ்சகம் செய்வதாக குற்றம்சாட்டி இந்த கோ பேக் மோடியை சர்வதேச அளவுக்கு எதிரொலிக்கச் செய்தனர். தற்போதும், நீட் பிரச்சனை தீரவில்லை. அப்படியே தான் இருக்கிறது.

திமுக எதிர்க்கட்சியாக இருந்த நிலையில்... பிரதமர் மோடி தமிழ்நாட்டுக்கு வந்தபோது, 'கோ பேக் மோடி' என்ற முழக்கத்தை தெருமுனையில் இருந்து ட்விட்டர் வரை முன்னெடுத்தார் திமுக தலைவரான மு.க.ஸ்டாலின். பிரதமர் மோடி இந்த எதிர்ப்புப் போராட்டங்களால், சென்னை ஐஐடிக்குள்ளேயே சாலை அமைத்து செல்ல வேண்டிய நிலைக்கு அப்போது தள்ளப்பட்டார்.

திமுகவின் வழியிலேயே அதன் கூட்டணிக் கட்சிகளான மதிமுக, விடுதலைச் சிறுத்தை உள்ளிட்ட கட்சிகளும் கோபேக் மோடி போராட்டத்தை முன்னெடுத்தன. மதிமுக பொதுச் செயலாளர் வைகோ மோடிக்கு எதிராக கறுப்பு பலூன்களை பறக்கவிட்டார்.

இப்போதும் தி.மு.க.பிரதமருக்கு எதிராக போராடுமா என்று இணையதளங்களில் விவாதம் போய்க்கொண்டிருக்கிறது.

பிரதமர் மோடி எங்களுக்கு எதிரியே அல்ல,

இந்துத்துவா தான் எங்களுக்கு எதிரி. எனவே தமிழகம் வருகின்ற பிரதமரை நாங்கள் வரவேற்கிறோம், அவர் இப்போது எங்களுக்கு " கெஸ்ட் " எனவே அவருக்கு எதிராக கருப்புக் கொடி காட்ட வேண்டிய அவசியம் திமுகவுக்கு இல்லை என திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ் பாரதி தெரிவித்துள்ளார். உரிமைக்கு குரல் கொடுப்போம். உறவுக்கு கை கொடுப்போம் என்ற முறையில்தான் திமுக பாஜகவையும், மோடியையும் அணுகுகிறது என்கிறார் தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி.

மாநில அரசின் திட்டங்களை துவக்கி வைப்பதற்காக வரும் பிரதமரை வரவேற்பது நமது கடமை. கருத்தியல் விஷயங்களில் எதிர்மாறான கருத்துக்கள் இருந்தாலும், அடிப்படையில் ஒரு அரசாங்கம், ஒரு அரசாங்கத்திடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும், மக்களுக்கு எது நல்லது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். மக்களுக்கு எதிரான திட்டங்களை திமுக அரசு ஒருபோதும் ஆதரிக்காது"என்று குறிப்பிட்டுள்ளார் கலைஞரின் மகளும் நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி.கனிமொழி.


எனவே வழக்கம்போல இந்த முறையும் பிரதமர் மோடியின் வருகையால் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது.

**2.கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை என்பார்களே?**

தொழில்நுட்ப முன்னேற்றத்தின் காரணமாக பலரும் அச்சுப் புத்தக வாசிப்பு குறைந்து மொபைல் ஆப் ல் வாசிக்க வாசகர்கள் மாறி இருந்தாலும், வாசகர்களுக்கு இன்னும் அச்சுப் புத்தகத்தை தொட்டு வாசிக்கும் பழக்கம் அப்படியேதான் உள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பரவலால் தேக்கம் கண்டிருந்த புத்தக விற்பனை, புத்தகம் பதிப்பு பணிகள் இந்த ஆண்டு 45வது சென்னை புத்தகக் கண்காட்சி ஜனவரி 6ம் தேதி முதல் ஜனவரி 23ம் தேதி வரை சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ வளாகத்தில் நடைபெறும் என்று






அறிவிக்கப்பட்டது. தென்னிந்திய பதிப்பாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்கள் சங்கம் (பபாசி) நடத்தும் 45வது சென்னை புத்தகக் கண்காட்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைப்பார் என்று அறிவிப்பும் வெளியானது. இந்த அறிவிப்பால் வாசகர்களும் பதிப்பாளர்களும் புத்தக விற்பனையாளர்களும் மகிழ்ச்சி அடைந்தனர். தமிழில் முன்னணி பதிப்பகங்கள், விற்பனையாளர்கள் பலரும் தங்கள் புதிய புத்தகங்களை அச்சிடுவதற்கு அச்சகங்களுக்கு அனுப்பிவிட்டனர். 45வது சென்னை புத்தகக் கண்காட்சியில் பல நூறு ஸ்டால்கள் இடம்பெறும் என்பதால் பல பதிப்பகங்கள் மற்றும் விற்பனையாளர்கள் தங்களுக்கு தேவையான ஸ்டால்களை கட்டணம் செலுத்தி ஸ்டால்களை பதிவு செய்துள்ளனர். புத்தக விற்பனை இரண்டு ஆண்டுகளாக தேக்கம் கண்டு முடங்கியிருக்கும் சூழலில், சென்னை புத்தக கண்காட்சி பதிப்பாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் ஒரு வாய்ப்பு என்பதால் உற்சாகத்துடன் தயாரானார்கள்.

சென்னை புத்தகக் காட்சியை இலக்காகக் கொண்டு பல நூறு பதிப்பாளர்கள், புதிய புத்தகங்கள், மறுபதிப்புகள் கோடிக்கணக்கில் பணத்தை வட்டிக்கு கடன் வாங்கி அச்சிட்டு, முதலீடு செய்திருக்கின்றனர். இது எல்லாம் புத்தகக் காட்சி விற்பனைக்குப் பின் கடனை திருப்பித் தந்துவிட முடியும் என்ற நம்பிக்கையில் பதிப்பகங்கள் ஈடுபட்டுள்ளன. இவர்களில் பெரும்பாளும் சிறு பதிப்பகங்கள் புத்தகம் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். புத்தகக் கண்காட்சி தொடங்குவதற்கு சில நாட்களே இருந்த நிலையில், தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், என்ன செய்வது என்று தெரியாமல் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இந்தநிலைமை இன்னும் எத்தனை நாள்களுக்கு நீடிக்கும், ஒரு சில நாட்களில் முடிவுக்கு வந்துவிடுமா அல்லது வாரக் கணக்கில் ஆகுமா? அதுவரை அமைக்கப்பட்டுள்ள புத்தகக் காட்சி அரங்கு தாங்குமா என்ற அச்சமும் எழுந்துள்ளது. இதனால், விறுவிறுப்பாக நடந்துகொண்டிருந்த புத்தகம் அச்சிடும் பணிகளும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்ற கவலையில் உள்ளனர் பதிப்பாளர்கள்.

# அறிவியல் பெயர் குழப்பமும், 'அப்டேட் ஆகாத சட்டமும்'

முனைவர். பா. ராம் மனோகர்

பிரச்சனை பற்றி தெரிஞ்சுக்கிறதுக்கு முன்னாடி, நாம், இப்போ விலங்குக்கு, தாவரத்துக்கு யார் பெயர் வச்சாங்கனு தெரிந்து கொள்வோமா !?.

1707 ஆம் ஆண்டில் பிறந்த ஸ்வீடன் நாட்டு உயிரியல் அறிஞர் கரோலஸ் லின்னேயஸ் (Carl Linnaeus) என்பவர் தான் முதலில் விலங்கு, தாவரம், அனைத்து உயிரினங்களுக்கும் "இரு பெயர் "இடும்(Binomial nomenclature )முறை கண்டுபிடித்தார்.இம்முறையில் ஒரு உயிரியின் பேரினம், சிற்றினம் என்ற இரண்டு பெயர் இணைத்து அறிவியல் பெயர் என அழைக்கப்படுகிறது. தற்போது வரை உலகம் முழுவதும் அறிவியல் அறிஞர்களால் பின்பற்றபடுகிறது. ஆனால் ஒவ்வொரு உயிரிக்கும் இதனை தவிர, மக்கள் புரிந்து கொள்ள அவரவர் உள்ளூர் தாய் மொழியிலும், ஆங்கிலத்தில் பொதுபெயர் (COMMON NAME )வைக்கப்பட்ட நிலை உள்ளது. எனினும் பெயர்கள் பற்றிய அறிவியல் "வகைபாட்டியல் "(TAXONOMY or CLASSIFICATION)பற்றிய நவீன, புதிய தகவல்கள் அரசின் நிர்வாகம், சட்டம் ஆகியவற்றில் நெடுங் காலமாக மேம்படுத்தப்படவில்லை என்பது உண்மை ! நம் நாட்டில் இயற்கை சார்ந்த விஷயம், சில முக்கிய துறைகளிலும் "அப்டேட் "ஆகவில்லை என்பது வருத்தம் ஆன செய்தி !இதனால் அரிய வனவிலங்குகள், பறவைகள், அழிநிலை செல்லுகையில், சட்டபூர்வமாக காப்பாற்றப்படுவதில்லை, அல்லது, தவறாக நிரபராதி, (விலங்கு இனம் காண அறியாத நிலையில் )தண்டனை பெறுகின்றனர்.



கரோலஸ் லின்னயெஸ்

பேர் தெரியாதவன், என்று ஏளனம் செய்வதும்,"பெயர் சொல்ல ஒரு பிள்ளை "எனவும், நம் மனித இனத்தில் பாரம்பரிய புகழ் பற்றி குறிப்பிடும் போது, ஒரு மனிதனுக்கு, அவனது பெயர் முக்கியத்துவம் பெறுவது நாம் அறிந்ததே. அடையாளம் காட்டுதல், குணத்தை அறிதல், தோற்றம் போன்றவை கூட ஒருவர் பெயர் சொல்லும்போது நம் நினைவுக்கு வருகிறது !அல்லவா !? அதுவும் தற்போதைய காலத்தில் பெயர், முகவரி, தொடர்பு எண், ஆகியவையும், அன்றாட வாழ்க்கையில் மிகவும் அவசியம் ஆகிவிட்டது !ஆனால்,ஆற்றில் நீந்தும் மீனுக்கும், ஆனை, புலி, சிங்கத்திற்கும் "ஆதார் அட்டை "வாங்க சொல்லி அரசு ஆணையிடமுடியுமா !? ஆஹ் அஹ்ஹா !சிரிப்பு வருதா ! .. ஆமாங்க ! ஆமைக்கு பெயர் மாறி, அநியாயமா ஒருத்தரை, கேரளா வனத்துறை கோர்ட், வழக்கு என பிரச்சனை ஆகிவிட்டது.

விலங்கு, தாவரங்களின், உள்ளூர் பெயர்கள், நமது நாட்டின் பல்வேறு மாநிலங்களில் அங்குள்ள மொழியில் வேறுபடுகின்றன. எடுத்து காட்டாக கர்நாடகத்தில் காணப்படும் ஒரு விலங்கின் பெயர், தமிழ் நாட்டில், வட இந்தியாவிலும் மாறுபடும்.இதனைதவிர, ஒரே மாநிலத்தில் கூட, வழக்கு மொழியில் உயிரினங்களின் பெயர் வெவ்வேறு முறையில் அழைக்கப்படுகிறது. மேலும், உலக அளவில், பழைய லத்தின் மொழி பெயர்கள், அவ்வப்போது மாற்றப்படுகின்றன. புதிய சிற்றினங்கள் கண்டுபிடித்தல் மூலம் பெயர் உருவாக்கப்படுகிறது. ஆனால் நமது நாட்டில் 1972 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட "வனவிலங்கு பாதுகாப்பு சட்டம்" எவ்வித மாற்றத்தையும், சிற்றினங்களின் பெயர், பொதுபெயர், ஆகியவற்றில் மாற்றத்தினை மேற்கொள்ளவில்லை என்று அசோகா டிரஸ்ட் உயிரினங்கள் பல்வகை பாதுகாப்பு ஆய்வு மையம் விஞ்ஞானி அரவிந்த் கூறுகிறார்.

சரி, ஆமை பெயர் மாற்றம் பிரச்சனை என்னவென்று பார்க்கலாமா !? ஆம், இந்திய மடல் ஒடு ஆமை (Indian Flap shell Turtle )ஒன்றை, கேரள வனத்துறை, ஜார்ஜ் குரியன் என்பவரிடமிருந்து, கைப்பற்றி, அந்த உயிரினம் அழியும் நிலையில் உள்ளது என அதனை வைத்துள்ள நிலை குற்றம் என நீதிமன்றத்தில் வழக்கு 2016 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் போடப்பட்டது. வனத்துறை, மேற்கண்ட ஆமையினை தவறுதலாக "இந்திய மென்மை ஒடு ஆமை" "(Indian Soft shell turtlமீ )என்று, அழிநிலை ஆபத்து என வரையறுக்கப்பட்ட சட்ட பூர்வ (1972, வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் )நடவடிக்கை எடுக்கப்பட்டது. உண்மையில் இந்திய மடல் ஓட்டு ஆமை சட்டத்தில் அட்டவணை மிகூழி ன் படி, எவ்வித ஆபத்து இல்லாத உயிரினங்கள் பட்டியலில் உள்ளது. இந்திய மென்மை ஓட்டு ஆமை மட்டுமே அட்டவணை மி ன் படி ஆபத்து, அழிநிலை பட்டியலில் உள்ளது. இது பற்றி அறிந்த குற்றவாளி என கருதப்பட்ட ஜார்ஜ் குரியன் நீதி மன்றத்தில் உண்மைகளை விளக்கினார். அதனால் 2018 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் நாள், அவர் மீது எடுக்கப்பட்ட குற்றநடவடிக்கைகள், வாபஸ் பெற தீர்ப்பு வழங்கியது. மேலும் இதனை எதிர்த்து

வனத்துறை உச்ச நீதிமன்றம், அப்பீல் செய்தபொழுதும்,2020 ஆண்டு, டிசம்பர் மாதம் 9 ஆம் தேதி, மேற்கண்ட, தீர்ப்பினை உறுதி செய்து உத்திரவிட்டது.

விலங்கு, தாவரங்களுக்கு பெயரிடும் முறையில் பல நவீன மாற்றங்கள் ஏற்பட்டுள்ளது.1970 ஆம் ஆண்டுகளில், சிற்றினங்களின் புறதோற்ற பண்புகள் அடிப்படையில் மட்டுமே பெயர் அமைக்கும் முறை இருந்து வந்தது. ஆனால் தற்பொழுது, மரபணுவில் உள்ள, டீ ஆக்ஸ்ரிபோஸ் நுக்ளிக் அமிலம் (DNA )முறையில் பல்வேறு ஆராய்ச்சி மேற்கொண்டு, பெயர் சூட்டப்படுகிறது.மேலும் ஒரு உயிரினத்தின் பெயர் சூட்டுவது ஆய்வாளர் இனம் கண்டறிந்து அதன் பண்புகள் பற்றிய ஆய்வு கட்டுரையினை, இந்திய விலங்கு கணக்கெடுப்பு நிறுவனம் (ZOOLOGICAL SURVEY OF INDIA ) அல்லது பம்பாய் இயற்கை வரலாற்று சங்கம் (Bombay Natural History Society )ஆகியவற்றிற்கு, மாதிரி உடன் அனுப்பி, அங்கு அவர்கள் அதற்கு வரிசை எண் அளித்து அது பின்னர் பன்னாட்டு விலங்கியல் பெயர் இடும் ஆணையம் (INTERNATIONAL COMMISSION FOR ZOOLOGICAL NOMENCLATURE ) என்ற அமைப்புக்கு அனுப்பப்படும். அந்நிறுவனம் அது வேறுபாடுடைய சிற்றினம் அறிந்த பின்பு பெயர் பற்றிய தகவல் உறுதி அடையும்.



தேவாங்கு

இந்திய அரசின் வனவிலங்கு பாதுகாப்பு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விலங்குகள் பற்றிய முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ள நிலை அரசு துறைக்கு தெரிவதில்லை. புதிய சிற்றினங்கள் கண்டறியப்பட்டாலும் அவை பற்றியும், சட்ட வரைவில் , நாட்டில் காணப்படும் மற்ற உயிரினங்கள் பெயர் மாற்றம் பற்றியும் எவ்வித நவீன செய்திகள் இல்லை. அதனால் விலங்கு குற்றங்களுக்கான சட்ட நடவடிக்கைகளில் குழப்பம் ஏற்படுகிறது.



ஆமை

தேவாங்கு (Loris tardigradus) சட்டத்தில் அட்டவணை 1 ல் காணப்படும். ஆனால் 1988 ஆம் ஆண்டு, ஸ்ரீலங்கா நாட்டில் உள்ள, சிவப்பு மென் தேவாங்கு வேறு என அறியப்பட்டு, அதன் சிற்றினபெயர், Loris lydikkerianus.. என்பது அட்டவணையில் இல்லை. இதே போல் எலி மான் (MOUSE DEER) அட்டவணை 1 ல் மட்டும் இருந்து வந்தது. இந்தியா விலும், ஸ்ரீ லங்கா வில் இருந்தது. பின்னர் Tragulus meminna, என்ற அவவுயிரினம், ஸ்ரீலங்கா நாட்டில் மட்டும் காணப்படும் என்றும், நமது நாட்டில் உள்ள சிற்றினம் Moschiola indica... என்பதை விஞ்ஞானிகள் அறிந்தனர்.

நட்சத்திர ஆமை போன்றவை, அதிகம் வேட்டை பாதிப்புக்குள்ளாகும் இனம் மிகவும் குறைந்த அளவில் பாதுகாப்பு பெறுவது, வேதனை !இவ்வாறு பல சிறு அரிய உயிரினங்கள், பறவைகள், தவளை, பல்லிகள், ஆகியன எவ்வித, பாதுகாப்பு கவனம் இன்றி உள்ள நிலை மிகவும் கவலைக்குரிய தகவல் ஆகும். ஏனெனில், செல்லவிலங்குகள் வணிகம் மூலமாக, இத்தகைய சிறு உயிரினம் முற்றிலும் அழியும் வாய்ப்பு உள்ளது.

விலங்கு வகைப்பாட்டியல், மாற்றங்கள் முறையாக “அப்டேட் “மேம்படுத்தல், செயல் பாடு இல்லாத நிலையில், வனவிலங்கு குற்றம், பாதுகாப்பு, நீதி மன்ற நடவடிக்கைகள், பல்வேறு பிரச்சினைகளை, குழப்பம் ஆகியவற்றை சந்திக்க நேரிடுகிறது.

வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் ஒருபுறம் இருப்பினும்,விலங்கு பெயர் இடுதல், மாற்றம் செய்தல், புதிய சிற்றினம் கண்டுபிடித்து, அதன் நிலை போன்ற வற்றை முறையாக செய்வது அவசியம் என திரு. சாக்கேத் படோலா என்ற பன்னாட்டு சட்டபூர்வமாற்ற வனவிலங்கு வணிகம் கண் காணிப்பு நிறுவனம் அலுவலர் (TRAFFIC ) தெரிவிக்கிறார். மேலும் இப்பிரச்சினைக்கு தீர்வாக தேசிய சிகப்பு பட்டியல் (NATIONAL RED LIST AUTHORITY )ஆணையம் உருவாக்கி மேற்கண்ட பணிகள் ஒருங்கிணைக்கலாம் என்றும், ஆய்வாளர்கள், நிபுணர்கள் கருதுகின்றனர். ஆம், விலங்கியல், வனவிலங்கியல், ஆய்வுகள் முடித்து பணிகள் தேடுகின்ற இளைஞர்கள், நமது நாட்டில் அதிகம் உள்ளனர். அவர்களின் ஆர்வம், அறிவியல் அறிவு ஆகியவற்றை இந்திய அரசு பயன்படுத்தி நம் நாட்டின் அரிய இயற்கை, வன விலங்கு வளத்தினை, மேலும் சிறப்பாக பாதுகாப்பு மேற்கொண்டு வர முயலலாம் !அரசு துறைகளும், பொதுமக்களும் சிந்திப்போமா??

# தமிழக அரசின் "இல்லம் தேடி கல்வி"

## திட்ட அதிகாரி திரு.இளம் பகவத் ஐ.ஏ.எஸ்




இளம்பகவத்தின் சொந்த கிராமம், சோழன்குடிகாடு. தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாடு அருகில் இருக்கும் சிறிய கிராமம். ஒரு சாதாரண விவசாயக் குடும்பப் பிள்ளை. இவருடைய அப்பா கந்தசாமி, சோழன்குடிகாடு கிராமத்தின் முதல் பட்டதாரி. பல்வேறு சமூக இயக்கங்களில் தீவிர ஈடுபாடுகொண்டவர். வருவாய்த் துறையில் கிராம நிர்வாக அலுவலராகப் பணியாற்றியவர். நேர்மையாகவும் உண்மையாகவும் பணிபுரிந்த ஓர் அரசு ஊழியர். இளம்பகவத்தின் தாயாரும் ஒரு பொதுவுடமைப் போராளி. உழைக்கும் பெண்களின் நலனுக்காக, தொடர்ச்சியாகப் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தும் பங்கெடுத்தவர். இப்படி ஒரு நல்ல சூழலில் வளர்ந்தவர் இளம்பகவத்.

ப்ளஸ் டூ நேரத்தில் இளம்பகவத்தின் அப்பா உடல்நலம் இன்றி இறந்துபோனார். ஒற்றை நபர் வருமானத்தில் இயங்கிய குடும்பம் தடுமாறி நின்றது. ப்ளஸ் டூவுடன் தன் படிப்பை நிறுத்திக்கொள்ளவேண்டிய கட்டாயம் இளம்பகவத்துக்கு.

அரசுப் பணியில் இருப்பவர் இறந்துபோனால் அவரது வாரிசு ஒருவருக்கு, கருணை அடிப்படையில் கொடுக்கப்படும் அரசுப் பணியை தனக்கு வழங்கிடக்கோரி, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்தார் இளம்பகவத். இது நடந்தது 1998 ம் ஆண்டு. ஓர் ஆண்டு காலம் கடந்தும் எதுவும் நடக்கவில்லை. சான்றிதழ்கள் அரசாங்க அலுவலக பீரோக்களில் முடங்கியதால் கல்லூரியிலும் சேர முடியவில்லை. திடீரென அழைப்பு வரும். குறிப்பிட்ட ஒரு சான்றிதழைப் பெற்றுத்தரச் சொல்வார்கள். அவசர, அவசரமாக அதைத் தயார்செய்துகொண்டு ஓடுவார். மீண்டும் காத்திருக்கச் சொல்வார்கள். அரசு அலுவலகங்களில் காத்திருப்பது இளம்பகவத்துக்கு தினசரி வேலையானது. வேலை மட்டும் கிடைக்கவே இல்லை.

``வாரிசு அடிப்படையிலான கருணைப் பணிக்கு, எனக்கு முன்னும் பின்னும் 18 பேர் காத்திருந்தனர். சிலர், இடையில் புகுந்து குறுக்கு வழியில் வேலை வாங்கிச்சென்றனர். எங்களுக்குப் பிறகு வந்த அவர்களுக்கு எப்படி வேலை கிடைத்தது என்ற கேள்விக்கு, யாரிடமும் பதில் இல்லை. வேலை கிடைக்காமல் காத்திருந்த நாங்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து ஆலோசனை நடத்தினோம். அப்போதுதான் நாங்கள் ஏமாற்றப்படுவதை உணர்ந்தோம்'' என்று அந்தக் கொடும் தினங்களை நினைவுகூர்கிறார் இளம்பகவத்.

அப்பாவின் நிலத்தில் விவசாயம் பார்த்து அதில் கிடைத்த வருமானத்திலும், அப்பாவின் சிறிய பென்ஷனிலும்தான் குடும்பம் நகர்ந்துகொண்டிருந்தது. இந்தக் காலகட்டத்தில் குடும்பம் வறுமையின் பிடியில் சிக்கித்தவித்தது. இரண்டு சகோதரிகளுக்கும் திருமண வயது வந்துவிட, அவர்களுக்கு திருமணம் செய்துவைக்கவேண்டிய நிலை. இதற்கு நடுவில் 2001ம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகத் தொலைதூரக் கல்வி நிறுவனத்தில் அஞ்சல் வழியில் பி.ஏ (வரலாறு) படித்து பட்டம் பெற்றார் இளம்பகவத். 2005ம் ஆண்டு




வாக்கில் இந்தப் போராட்டம் இளம்பகவத்துக்கு சலிப்பை உண்டாக்கத் தொடங்கியது. இனி எதுவுமே நடக்காது; வேலை கிடைக்காது என்ற முடிவுக்கு வந்தார். `இந்த வேலை வேண்டாம், இந்த முயற்சிகள் போதும்' என நினைத்தார்.

`இனி இந்த அலுவலகத்துக்குத் திரும்பி வந்தால், இவர்களிடம் வேலை கேட்டு வரக் கூடாது. வேலை வாங்குகிறவனாகத்தான் வரவேண்டும்' எனத் தீர்மானித்தார். அப்போது இளம்பகவத்தின் மனதுக்குள் விழுந்ததுதான் ஐ.ஏ.எஸ் கனவு.

2007ம் ஆண்டில் டி.என்.பி.எஸ்.சி குரூப்4 தேர்வு எழுதினார். அதில் வெற்றிபெற்று காவல் துறை அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பதவி ஏற்றார். அடுத்த ஆறு மாதங்களில் குரூப்2 தேர்வு எழுதி, சென்னை தலைமைச் செயலகத்தில் உதவியாளர் ஆனார். அங்கு இருந்து உள்ளாட்சி நிதி உதவி தணிக்கை ஆய்வாளராகப் பணியில் சேர்ந்தார். இதற்கு நடுவில் 2010ம் ஆண்டில்

குரூப்2 தேர்வில் வெற்றிபெற்று, இளநிலை வேலைவாய்ப்பு அலுவலர் பணியில் சேர்ந்தார். 2011ம் ஆண்டில் டி.என்.பி.எஸ்.சி குரூப்1 தேர்வில் தேர்ச்சி பெற்று, ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் ஆனார். 2014ம் ஆண்டு சிவில் சர்வீஸஸ் தேர்வில் வெற்றிபெற்றபோது ஐ.ஆர்.எஸ் (இந்திய வருவாய் பணி) பணி கிடைத்தது. இதற்கு இடையே, மீண்டும் டி.என்.பி.எஸ்.சி குரூப் 1 தேர்வில் வெற்றிபெற்று போலீஸ் டி.எஸ்.பி பணி கிடைத்தது. அடுத்த ஆறு மாதங்கள் டி.எஸ்.பி பயிற்சியில் இருந்த இவர், அதன் பிறகு ஹரியானா மாநிலத்தில் உள்ள நேஷனல் அகாடமி ஆஃப் கஸ்டம்ஸ் அண்ட் எக்சைஸ், நார்காட்டிக்ஸ் மையத்தில் பயிற்சியில் சேர்ந்தார். இப்படி 2007ம் ஆண்டு தொடங்கி 2016ம் ஆண்டு வரை ஏழு அரசு அலுவலகங்களில் பணியாற்றினார் இளம்பகவத். ஒரே ஓர் அரசுப் பணிக்காக ஆண்டுக்கணக்கில் காத்திருந்த இவரை நோக்கி விதவிதமான அரசுப் பணிகள் தேடிவந்தன. ஆனால், அவரது லட்சியம் அது அல்ல... ஐ.ஏ.எஸ்!

2005ம் ஆண்டு தொடங்கி கடந்த ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டும் சிவில் சர்வீஸஸ் தேர்வை அவர் எழுதிக்கொண்டே இருந்தார். இதுவரை மொத்தம் ஐந்து முறை நேர்முகத் தேர்வு வரை சென்று வந்துள்ளார். ஆனால், ஒருமுறைகூடத் தகுதி பெறவில்லை. இருந்தும் மனம் தளரவில்லை.அகில இந்திய அளவில் 117வது ரேங்க் பெற்றிருக்கும் இளம்பகவத், சிவில் சர்வீஸஸ் தேர்வை, தமிழில் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்போது #இல்லம்தேடிகல்வி திட்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்

``நாம் கற்கும் கல்வி, பகிர்தலைத்தான் நமக்குக் கற்றுத்தருகிறது. நாம் செய்ய வேண்டியதும் அதைத்தான்'' எனப் புன்னகைக்கிறார் இப்போது #இல்லம்தேடிகல்வி திட்ட அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள இளம்பகவத் ஐ.ஏ.எஸ். மித்ரா டைம்ஸ் சார்பில் வாழ்த்துகிறோம்!

**அனுப்பியவர்:முகவரி ரமேஷ்**

# உடைந்த எழும்பைக் கூட ஒட்ட வைக்கும் மூலிகை

## அதிர்ந்து போன மருத்துவர்கள்



இன்றைக்குத் தான் சாதாரண தலைவலிக்கே மருத்துவமனைக்கு ஓடுகிறோம். நம்முன்னோர்களை கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அவர்களின் வாழ்க்கையில் மூலிகைகளே பிரதானமாக இருந்தது.

அவர்களின் மருத்துவத்தில் முக்கியப் பங்கு வகித்த மூலிகை தான் அருகாம்பச்சை என்றும், சதாப்பு இலைச்செடி என்றும் அழைக்கப்படும் அருவதா செடி. இதன் பூர்வீகம் மேலை நாடு என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் நம்மூரு காடுகளிலும் திபு, திபுவென வளர்ந்து விடுகிறது. அடர்ந்த காடுகளில் மற்றும் மலைகளில் இயற்கையாக உள்ள இந்தச் செடி மூன்றடி உயரம் மட்டுமே வளரும். இதன் இலைகள் முருங்கை இலைகள் போல, சின்னதாக தண்டுகளில் இணைந்து காணப்படும். இந்த செடியில் மஞ் சள் நிறத்தில் பூவும் பூக்கும்.

இவை வறட்சியை தாங்கி வளரும் தன்மையுடவை. இதன் இலைகள், வேர்கள், காய்கள் அனைத்தும் மருத்துவப் பலன்கள் நிறைந்தது. இவை வீடு, வணிக நிறுவனங்களிலும் அழகுக்காகவும் வளர்க்கப்படுகிறது. இந்த மூலிகை செடி இருக்கும் இடத்தில் ஈக்கள் மொய்க்காது. இந்த செடி நாய், பூனைகளுக்கும் ஆகாது.

இந்த இலைக்கு எழும்பு முறிவு பாதிப்புகளை குணமாக்கும் ஆற்றலும் உண்டு. முதுகு தண்டு பாதிப்பை குணமாக்கும். முதுகுத்தண்டுவட வலி மற்றும் முதுகு வலி பாதிப்புகளையும் இது குணமாக்கும். சிறுநீர் கழிக்கும் போது அவரும் எரிச்சலைப் போக்கும். சிறுநீர்த்தாரை அடைப்பை சரியாக்கும். கருப்பை பாதிப்புகளையும் அகற்றும். இந்த இலைகளுக்கு மூட்டுவலியை குணப்படுத்தும் தன்மையும் உண்டு. மன அழுத்தத்தினால் உருவாகும் நரம்பு பாதிப்புகளை குணப்படுத்தி இரத்தத்தை தூய்மைப்படுத்தி வயிற்றுப் புழுக்கள அழிக்கும்.

பெண்களுக்கு மாதவிலக்கில் ஏற்படும் இரத்தப் போக்கு பாதிப்புகளை சரி செய்யும். உடல் சூட்டையும் போக்கும். மேலும் அதனால் ஏற்படும் வாத உடல் வலி, வயிற்று வலியையும் போக்கும். சுளுக்கைக், கூட இந்த இலை சுளுக்கெடுத்து விடும். அதாவது போக வைத்துவிடும். மூலவியாதி, உடல் அணுக்களை பாதிக்கும் புற்றுவியாதி ஆகியவற்றையும் சரி செய்யும்.சுவாச பாதிப்பை போக்கும்.

இந்த இலைகளை பூண்டு சேர்த்து நீரில் கொதிக்க வைத்து, கீரையைப் போல் கடைந்து உணவில் சேர்த்து சாப்பிடலாம். இதனால் மூட்டு வலி, சிறுநீர்ப்பை அடைப்பு, மூச்சுத்திணறல் ஆகியவை ஓடிவிடும்.



இதேபோல் இந்த இலையை நிழலில் உலர்த்து, இடித்துப் பொடியாக்கி வைத்துக்கொள்ள வேண்டும்.

அதிமதுரப்பொடி, சதகுப்பை, கருஞ்சீரகம், இலவங்கப்பட்டை, இதையெல்லா பொடியாக்கி அனைத்தையும் ஒன்றாகக் கலந்து, அதில் சிறிதளவு எடுத்து அத்துடன் பணங்கற்கண்டு சேர்த்து தினமும் இருவேளை சாப்பிட்டு வர உடல் சூடு தணியும்.

உங்களை மன அழுத்தம் வாட்டுகிறதா? அதற்கும் கூட சதாப்பு இலை மருந்து தான். இந்த இலைகளை சிறிதுஎடுத்து, நன்கு மையமாக அரைத்து அத்துடன் சிறிது மிளகுத்தூள் சேர்த்து தினமும் இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால் மன அழுத்த பாதிப்புகள் விலகி, மனநிலை இயல்பாகும்.



இந்த இலைச்சாறை தேனில் குழைத்தும் சாப்பிடலாம். இந்த இலையை நன்றாக அரைத்து அந்த விழுதை மிளகுத்தூள் சேர்த்து, கொஞ்சம் எடுத்து தாய்ப்பாலில் கலந்து குழந்தைகளுக்கு சங்கில் இட்டு வாயில் ஊட்டினால் குழந்தைகளின் மார்பு சளி மட்டுப்படும்.

பக்கவாத பாதிப்பால் பலரும் வீட்டுக்குள் முடங்கிப் போய் இருப்பார்கள். இவர்கள் சதாப்பிலைகளை நன்றாக அரைத்து உடலில் வாத பாதிப்பு உள்ள இடங்களில் மேலே தடவினால் சிறிது, சிறிதாக பாதிப்புகள் அகலும். இதேபோல் நரம்பு சுருட்டல் பாதிப்பையும் இது குணமாக்கும். இந்த இலைகளை நீரில் கொதிக்க வைத்து, அந்த நீர் வற்றியதும் ஆறவைத்து தினசரி இரண்டு அல்லது மூன்று வேளை பருகினால் மூட்டுவலி சரியாகும். குடல் புழு அழியும். இரத்த நாள அடைப்புகள் இருந்தால் அதையும் போக்கிவிடும்.



ஞாபசக்தியை அதிகரிப்பது, கண் வீக்கம், வலியை போக்குவது என இதன் பயன்கள் இன்னும் அதிகம்.

**– எம்.கிருஷ்ணன்,**
**தொழிலதிபர்**



# கிடைப்பது கிடைத்தே தீரும்!

ஒரு ராஜா ஒரு கோவிலில் தன் பிறந்த நாளை முன்னிட்டு அன்னதானம் செய்துகொண்டிருந்தான்.

அப்போது ஒரு பரம ஏழை வந்து வரிசையில் நின்றான்.

அவனை பார்த்த மற்றவர்கள் முகம் சுளித்து ஒதுங்கி நின்றனர்.

இதை உணர்ந்த அந்த ஏழை, இவர்களுக்குத்தான் நம்மை பிடிக்கவில்லையே, வரிசையில் நிற்காமல் ஒதுங்கி நின்று எல்லோரும் அன்னதானம் பெற்றபின்பு நாம் வாங்கிக்கொள்வோம் என்று தள்ளி நின்றான்.

நேரம் போய்க்கொண்டே இருந்தது. இவன் தள்ளி நின்றதால் இவனுக்குப் பின்னால் வந்தவர்கள் எல்லாரும் அன்னதானம் பெற்றார்கள்.

சிலர் அன்னதானம் பெற்றுக்கொண்டு இவனை ஏளனம் செய்து சிரித்துவிட்டுப் போனார்கள்.

இவன் வாயைத் திறந்து எதுவும் சொல்லவில்லை என்றாலும் மனதிற்குள் ஒரு சோகம்.

எல்லோருக்கும் தரப்படும் அன்னதானம் கூட நமக்கு கிடைக்க எவ்வளவு காத்திருப்பு?

எவ்வளவு போராட்டம்?

எவ்வளவு இழிசொல்?

போன ஜென்மத்தில் என்ன பாவம் செய்தோமோ இப்படி தவிக்கிறோமே? என்று தன் விதியை நொந்துகொண்டான்.

மாலை வரை காத்திருந்து காத்திருந்து, சரி நமக்கு இன்று பட்டினி என்று எழுதியுள்ளது போல 'அப்பனே ஆண்டவா...என்னை ஏனப்பா இப்படி ஒரு இழி பிறவியில் பிறக்கச் செய்தாய்' என்று கோபுரத்தை பார்த்து மனதில் உள்ள தன் குமுறலைச் சொல்லி, கோவில் அருகே உள்ள குளத்தங்கரையில் அமர்ந்தான்.

குளத்து நீரை கையில் எடுத்து முகத்தை கழுவி, படியில் சோர்வாக அமர்ந்தான்.

ராஜா அன்னதானம் கொடுத்து முடித்து, அந்த படித்துறையில் காலாற நடந்து வந்தார்.

"என்னப்பா...சாப்பிட்டாயா?"

என்று ஒரு பத்தடி தூரத்திலிருந்து குளத்தில் தன் முகத்ததை பார்த்துக் கொண்டிருந்த அந்த ஏழையிடம் கேட்டார்.

கேட்பது ராஜா என்று தெரியாமல் "ஊரே சாப்பிட்டது..என் தலையில் இன்று பட்டினி என்று எழுதியுள்ளது போல அய்யா" என்று விரக்தியாக, முகத்தைகுளத்துநீரை பார்த்தபடியே பதில் சொன்னான் அந்த ஏழை.

அவன் சொன்ன பதில் ராஜாவின் மனதை உருக்கியது.

என் பிறந்தநாளில் ஊர் மக்கள் யாரும்



பசியுடன் உறங்கச் செல்லக் கூடாது என்றுதானே அன்னதானம் ஏற்பாடு செய்தோம்?

ஒரு அப்பாவி ஏழை இப்படி விடுபட்டுள்ளானே என்று அவன் அருகில் சென்று அவன் தோளில் கை வைத்து 'மன்னித்துவிடப்பா...ரொம்ப பசிக்கிறதா உனக்கு?" என்று கேட்க.

குளத்து நீரில் தலையில் கிரீடம், காதில் குண்டலம், நெற்றியில் திருநீர், முகத்தில் வாஞ்சை என்று ராஜா தெரிய திடுக்கிட்டு எழுந்தான்.

'ராஜா...நீங்கள் என்று தெரியாமல் அமர்ந்துகொண்டே பதில் சொல்லிவிட்டேன்...

மன்னிக்க வேண்டுகிறேன்' என்று பதறினான்.

இவனின் பண்பை பார்த்த ராஜா சத்தமாக சிரித்தார்.

'வா...இன்று நீ என்னோடும் ராணியோடும் விருந்து உண்ணப்போகிறாய்' என்று அவனை பேசவிடாமல் எழுத்துச் சென்று அவரின் தேரில் ஏற்றிக்கொண்டு, அரண்மனைக்கு விரைந்தார்.

'போய் குளித்துவிட்டு வா' என்று தனக்கென்று வாங்கி வைத்திருந்த புதிய ஆடைகளில் ஒன்றை அவனுக்கு கொடுத்தார்.

குளித்து, புத்தாடை அணிந்தது வந்தான். அறுசுவை விருந்து கொடுத்தார்.

சாப்பிட்டு முடித்து அவன் கையில் ஒரு குடம் நிறைய பொற்காசுகளை கொடுத்தார்.

'இன்றிலிருந்து நீ ஏழை இல்லை...

இந்த பணத்தை வைத்து நீ விரும்பும் தொழிலை நேர்மையாக செய்து கௌரவமாக வாழ்" என்று வாழ்த்தினார்.

நமக்கு ஒன்று கிடைக்கவில்லை என்றால் சராசரியைவிட மிகச் சிறந்த ஒன்றை நமக்காக கடவுள் தரப்போகிறார் என்று நம்புங்கள்.

நல்லதே நடக்கும்.

**- டி.எஸ்.கவின், பண்ருட்டி**

# ஆசிரியர் பங்கேற்ற கிருஸ்துமஸ் விழா!





எம்.எஸ்.எம். நண்பர்கள் நல உதவி மையத்தின் சார்பாக நடைபெற்ற கிருஸ்துமஸ் திருவிழாவில் தமது நண்பர்களுடன் மித்ரா டைம்ஸ் ஆசிரியர் திரு.எம்.எஸ். மூர்த்தி அவர்கள் பங்கு கொண்டு கேக் கொடுத்து வாழ்த்தினார்.

MITRA TIMES Tam & Eng Monthly Postal Registration No. TN/CH(C)/523/2019-2021
Registered with Registrar of News Paper for India Under No.TNBIL/2015/64028 - Date of publishing 1st week of Every Month
WPP Licence No.(Inland) TN/PMG(CCR)/WPP/609/2019-2021
POSTED AT EGMORE/RMS. PATRIKA CHANNEL. POSTED ON. 1-7 JANUARY 2022




Printed, Owned and Published by M.SUNDARAMOORTHY, Printed at SRI PADMALAYA PRINTERS, No.8/18, Manali Salai, Korukupet, Chennai - 600 021. Published at No.602, Suruthi Block, Chitra Avenue, No.9, Choolaimedu High Road, Chennai - 600 094. Editor M.SUNDARAMOORTHY